முரசொலி

மு. கருணாநிதி

எழுதும்

சுருளிமலை

கற்பனை உரையாடல்

இந்தியாவின் இராம தூதர்கள்!

[கல்லூரிப் பேரவையிலே "தூதின் இலக்கணம் யாது?" என்ற விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.....]

தலைவர்: நம் கல்லூரி அவையிலே நடக்கும் விவாதம் நாட்டினரைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது! கூறப் போனால் நாட்டினருக்கு நற் கருத்துக்களைத் தந்து நல்வழிப்படுத்தும் பணியிலே நம் பேரவை ஈடுபட்டிருப்பது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்! இன்று ஒரு நாட்டின் சார்பிலே அனுப்பப்படும் தூதர்கள் எத்தகைய பண்பாடுகளைப் பெற்றிருக்க வேண்டுமென்பது குறித்து கல்லூரி அன்பர்கள் விவாதிக்கப் போகிறார்கள்! முதன் முதலில் விவாதத்தை திரு முத்துவேலன் அவர்கள் ஆரம்பித்து வைப்பார்......!

முத்துவேலன்: தூதின் இலக்கணத்தை அறிந்து கொள்ளும் துடி துடிப்புடன் கூடியுள்ள தோழர்களே! தோழியர்களே! "தூது" என்றால் அன்னம் விடு தூது; கிளி விடு தூதா—என என்னைக் கேட்டு விடாதீர்கள்! ஏனெனில் நான் காதலர்கள் விடும் தூதை விட்டு விட்டு, அரசியல் தூதின் இலக்கணத்தை ஆராய ஆசைப்படுகிறேன்!

தூதின் இலக்கணத்தை நன்கு அறிந்து கொள்ள உங்களை எல்லாம் பண்டைய தமிழகத்திற்கு சிறிது அழைத்துச் செல்ல விரும்புகிறேன்! 'தமிழகத்தின் கிழவி ஒருவள் தூது சென்று, ஒரு பெரிய போரையே தவிர்த்தாள்' என்பதைக் கேட்டு மகிழ்ச்சி அடைவீர்களென நினைக்கிறேன். பண்டைத் தமிழரசர்களான அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் பகை முற்றியிருந்தபோது, அதியமானது அவைக் களத்திலே இருந்த கிழவிதான், அந்த அரும் பெரும் சாதனையைச் செய்து முடித்தவள்!

அதியமானது தூதுவராக வந்த அந்தக் கிழவியை, காஞ்சி மன்னனை தொண்டைமான், தன் படைக் கலச் சாலைக்கு அழைத்துச் சென்று அங்கே நெய் பூசப்பட்டும், உறையில் இடப்பட்டும், பலப் பலவிதமாக அழகு செய்யப்பட்டும், அணி அணியாக வைக்கப்பட்டிருந்த போர்க் கருவிகளை எல்லாம் பெருமையுடன் காட்டலானான். அந்தக் கிழவி, தொண்டைமானது செருக்கை அடக்கக் கருதினாள். உடனே கிழவியானவள், "நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியும்! உங்கள் நோக்கமென்ன என்பதும் எனக்குத் தெரியும்! நீர் பாக்கிஸ்தான் உடன்படிக்கையின் பிரதிநிதி! ஆதலால் பாகிஸ்தானுக்குப் பரிந்து கொண்டுதான் பேசுவீர்!"—என்று கிருஷ்ண மேனன் ஐ. நா. அவைத் தலைவரை நோக்கிக் கூறியதுபோல் கூறவில்லை! அல்லது இராம இராஜ்யத்தின் இராம தூதரான அதே மேனன், பிரிட்டிஷ் பிரதிநிதியை நோக்கி, "உங்கள் நாடு சூழ்ச்சி செய்கிறது! உங்கள் நாட்... னையைத் தீர்த்துக் ... விரும்புகிறது!......அவ்... உங்கள் பேச்சு எனக்குத் தலைவேதனையாக இருக்கிறது!" என்று கூறியதுபோலக் கூறவில்லை!

கிருஷ்ண மேனன், காஷ்மீர் பிரச்சினை குறித்து அகில உலக பிரதிநிதிகள் கூடியுள்ள அவையிலே கூறிய கருத்துக்களுடன், பலப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு — புறநானூற்றுக் காலத்திலே வாழ்ந்த எங்கள் தமிழ் நாட்டின் கிழவி கூறிய வார்த்தைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறேன்! 'தமிழர்களுக்கு ஆட்சிமுறை தெரியுமோ?' எனத் தாறுமாறாக பேசும் தற்குறிகள் சிறிது கவனித்து, எங்கள் பண்டைய கிழவியோடு, உங்களின் இன்றைய கிருஷ்ணனை ஒப்பிட்டுப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்!

காஞ்சி மன்னனை நோக்கிக் கிழவி கூறுகிறாள்: "காஞ்சி மன்னா! அடடா! உன் படைக்கலங்களின் அழகு தான் என்னே! என்ன பளபளப்பு! எவ்வளவு புதிதாகத் தென்படுகின்றன! இந்த போர்க் கருவிகளெல்லாம் போர்க்களத்தையே பார்த்ததில்லை போலும்! மயில் பீலி யணியப்பட்டும், மாலை புனையப்பட்டும், திரண்ட காம்பு திருத்தி நெய் தடவப் பெற்றும், இவைகள் எல்லாம் பாதுகாப்பினை உடைய அரண்மனையிலேயே பயனற்றுக் கிடக்கின்றன. ஆனால் தனது செல்வத்தைப் பலருக்கும் பகிர்ந்தளித்துண்ணும் வள்ளல் தன்மை உடைய அதியமானது போர்க் கருவிகள் போரிலே பகைவரைத் தாக்கியமையால், கங்கும் நுனியும் ஒடிந்து ஒழுங்கு செய்தற் பொருட்டு, கொல்லனது பணிக்களத்தை அடைந்திருக்கின்றன!"- இங்ஙனம் கூறி, காஞ்சி மன்னனைப் புகழ்வதுபோல் இகழ்ந்தும், தம் மன்னனை இகழ்வதுபோல் புகழ்ந்தும் தொண்டைமானின் செருக்கை அடக்கிப் போரைத் தவிர்த்தாள், தமிழகத்தின் பண்டைய பாட்டி! அந்த ஔவைக் கிழவியோடு காங்கிரசின் கிருஷ்ண மேனனை ஒப்பிட்டுப் பார்த்தால் உங்களுக்கே 'தூதின் இலக்கணம்' விளங்கி விடும்! வணக்கம்!

[பலத்த கைதட்டல்]

தலைவர்: அடுத்தபடியாக திருமதி தமிழரசி அவர்கள், "இராம இராஜ்யத்திற்கேற்ற தூதுவர்கள்!" என்ற பொருள்பற்றி பேசுவார்கள்!

தமிழரசி: நான் பேசவிருந்த "கிழவியும் கிருஷ்ண மேனனும்" என்ற தலைப்பு பற்றி தோழர் முத்துவேலன் பேசி விட்டதால் "மேனன் உண்மையிலேயே ஓர் இராம தூதர்!" என்பது பற்றி ஒரு சில கூற விரும்புகிறேன்! இராமாயண காலத்திலே "அநுமான்" என்ற குரங்கு இலங்கைக்குத் தூது சென்ற கதை உங்களுக்கெல்லாம் நன்கு தெரியும்! நாமெல்லாம் அதனுடைய திருஅவதாரமல்லவா? டார்வின் கொள்கையைப் படிக்கும் நீங்கள் இதைக் கேட்டு சிரிக்கக் கூடாது! இராம தூதரின் கதையைக் கேளுங்கள்! சீதையைக் கண்டவுடன் ஒழுங்காக திரும்ப வேண்டியதுதானே அதன் கடமை? வாலைச் சுருட்டிக் கொண்டு வந்து சேர்ந்ததா? மேலும் அது செய்த திருவிளையாடல்களைக் கம்பர் கூறக் கேளுங்கள்!

"கொடியைப் பற்றி விதானங் கொளுத்தியே
நெடிய தூணைத் தழுவி நெடுஞ் சுவர்
முடியச் சுற்றி முழுது முருக்கிற்றால்
கடிய மாமனை தோறுங் கடுங் கனல்!"

"வானகத்தை நெடும்புகை மாய்த்தலால்
போன திக்கறியாது புலம்பினர்
தேனகத்த மலர்பல சிந்திய
கானகத்து மயிலன்ன காட்சியார்"

—குரங்கார் செய்த திருவிளையாடல்களைப் பார்த்தீர்களா?

இங்ஙனம் இலங்கை வேந்தன் தலைமேல் உட்கார்ந்து, தாறுமாறாகப் பேசி, இலங்கை நகரைத் தீக்கிரையாக்கிவிட்டு மிகவும் நல்ல பிள்ளைபோல இராமனிடம் வந்து,

"கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்
தெண்டிரை யலைகடலிலங்கை தென்னகர்
அண்டர் நாயக விளித்துறத் தீயையும்
பண்டுளது யருமென்று அநுமன் பன்னுவான்!"

அநுமானின் தூது பெரும் போரில் போய் நின்றது! இலங்கை நகரமே அழிந்தது!

அன்றைய அநுமானுக்கும் இன்றைய மேனனுக்கும் எத்தகைய வேறுபாடுகளுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை! அடிக்கடி மேனனும் ஐ. நா. சபை சென்று வருகிறார். திரும்பி வந்து "...ண்டேன் காஷ்மீரை!" என்று கூறுகிறார்! கலியுகத்தின் அநுமான் — இராம இராச்சியத்தின் இணையற்ற இந்த இராம தூதுவரின் தூது எந்தப் போரிலே போய் நிற்குமோ, அது உங்கள் ஆண்டவனுக்குத்தான் தெரியும்! ஆண்டவன் பேச்சை எடுத்ததும், பரவையிடம் தூது சென்ற பரமசிவன் பேச்சை எடுத்து விடாதீர்கள்! ஏனெனில் அது அரசியல் தூதல்ல! அதே போல் 'நாரதர்' நடத்திய தூதுகளைப் பற்றியெல்லாம் சினிமாவில் பார்த்திருப்பீர்கள்!

ஆனால் இந்த இரண்டு கிருஷ்ணர்கள்— கிருஷ்ண மேனன்; கிருஷ்ணமாச்சாரியார்—

அய்யோ; வெட்கம்!



உலக கம்யூனிசத்தை எதிர்த்து 'நாட்டோ' 'சீட்டோ'க்கள் இருப்பதைப்போல இப்போது கேரளத்திலும் ஒரு 'எதிர்ப்பணி' உருவாகியிருக்கிறது.



வெள்ளி 20-12-57 சென்னை

அலுமினியம் இல்லை!

'தோண்டினால் தங்கமுண்டு; பகைவர் தீண்டினால் பாயும் சிங்கக் குணமுண்டு'—என்று நாட்டின் பெருமையையும், நாட்டு மக்களின் பெருமையையும் பாடி வந்திருக்கிறோம்.

தமிழகம் இன்னமும் ஒரு ஏழை வீட்டுப் பெண்ணாகவே இருந்து வருகிறது.

அழகிதான்; ஆனால் அலங்காரம் எதுவும் கிடையாது! உடுத்திக் கொள்வதற்கு ஒழுங்கான உடை கிடையாது!

மையில்லாக் கண்கள்; ஆரமில்லாக் கழுத்து; திலகமில்லா நெற்றி—இதுதான் தமிழகத்தின் நிலைமை!

முக்கனி வழங்கும் இந்த முத்தமிழ் நாட்டில் கனிச் செல்வத்திற்குக் குறைச்சலில்லை.

நிலக்கரி உண்டு; அலுமினியம் உண்டு; இரும்பு உண்டு; எண்ணெய் உண்டு—ஆனால் அவைகளை வெளிக் கொணர்ந்து; தமிழர் வாழ்வை வளம்பெறச் செய்வதற்குத்தான் வழிவகையில்லை!

உதாரணமாக இந்திய உபகண்டத்திலே ஆண்டுதோறும் **12,500** டன் அலுமினியம்தான் உற்பத்தியாகிறது.

ஆனால் இந்தியாவின் மொத்தத் தேவையோ **40,000** டன்கள்!

இவ்வளவு தேவையுள்ள அலுமினியத்தை உற்பத்தி செய்வதற்கு சேலம் மாவட்டத்திலேயுள்ள மேட்டூர் பகுதியிலே வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன.

அவையனைத்தையும் பயன்படுத்தி முயற்சி மேற்கொள்ளப்பட்டால் ஆண்டுதோறும் **10,000** டன் அலுமினியம் கிடைக்கலாம்.

—இவ்வளவு அலுமினியம் கிடைக்க வகை செய்யும் இந்தத் திட்டத்திற்குத் தேவையான தொகையோ **12** கோடி ரூபாய்கள்.

—இந்தத் தொழிற்சாலையை இயங்க வைப்பதற்கு ஒரு பிரெஞ்சு நிறுவனம் தயாராக இருக்கிறது.

ஆனால் அதன் நிலை என்ன இப்போது? திட்டம் அமுலாக்கப்படுவது எந்தக் கட்டத்திலிருக்கிறது?—இப்படியெல்லாம் தொடர்ந்து கேள்விகள் எழலாம்.

அதற்கான பதில்தான் வழக்கம்போல் ஏமாற்றம் தருவதாக அமைந்திருக்கிறது.

அமைச்சர் வெங்கட்ராமன் இந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக; அறிவித்திருக்கிறார்.

காரணம் என்ன?

வேறொன்றுமில்லை; நிதி நிலைமை சரியாக இல்லாததுதான்! தென்னாட்டில் நிறுவப்படவேண்டிய தொழிற்சாலையல்லவா; நிதி வசதி எப்படிப் போதுமானதாக இருக்கும்!

ஆனாலும் ஒரு நிபந்தனையை விதித்திருக்கிறார், அமைச்சர்:

இந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு யாரேனும் தனிப்பட்ட நபர்கள் முன்வருவார்களேயானால் அதனை அரசாங்கம் வரவேற்குமாம்!

தென்னாட்டில் இவ்வளவு கோடி ரூபாய் முதல் போடக்கூடிய முதலாளிகள் எவரேனும் இருக்கிறார்களா?

இருக்கிறார்கள்; 'ஜனசக்தி' ஏடுகூட தமிழ் நாட்டு முதலாளிகள் இந்த முயற்சிக்கு முன்வர வேண்டுமென்று இரு கையேந்தி வரவேற்பதுபோல் எழுதியிருந்தது.

ஆனால் அந்த முதலாளிகள் அனைவரும் நிச்சயமாக இதற்கு முன்வரமாட்டார்கள்.

திட்டத்திலிருந்து தென்னகத்தில் அமைய இருந்த நல்ல தொழிற்சாலையொன்று கைவிடப்பட்டதுதான்!

—ஆனால் கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்புவரை, அவர்கள் மக்கள் மன்றத்திலே கூறிவந்த செய்தி என்ன?

"ஆலை அங்கே—

பாலை இங்கே!

—என்பதெல்லாம் பொய்; தி. மு. கழகத்தவரின் தேசிதேத்துப் பேச்சு! அதையெல்லாம் நம்பாதீர்கள்!"

—மேடையேறி முழக்கினார்கள், காங்கிரஸ்காரர்கள்!

தேர்தல் முடிந்தது; ஓட்டு வேட்டை வெற்றிகரமாக நடைபெற்றது.

—அதற்குப் பிறகுதான் அதிர்ச்சிதரும் செய்திகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடுகிறார்கள்!

இந்தச் செய்தித் தொடரில் முக்கியமானதுதான் சேலத்து அலுமினியத் தொழிற்சாலை கைகழுவப்பட்டதும்!

இது ஒன்று; இன்னும் எத்தனையோ!

குமரி அழைக்கிறது!

நீலத்திரை கடலோரம் நின்று; கலம் மிதந்து சென்று அன்று நாம் அடிமைப் படுத்திய சின்னஞ்சிறு சிங்களம் இன்று விடுதலைச் சிந்து பாடிக் கொண்டிருப்பதைக் கண்டு நமக்கும் அவ்வாழ்வு வராதா; நமது மண்ணிலும் சுதந்திரக் கொடி பட்டொளி வீசிப் பறக்காதா—என்ற ஏக்கத்தில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் குமரி முனையிலே மீண்டும் நமது பாசறை அமைகிறது.

ஆமாம்; வளங் கொழிக்கும் நாஞ்சில் மாவட்டத்திலே கண்ணீர்க் குளத்தினில் மிதக்கும் திராவிட நாட்டார் எதிர்கால நலம் வகுக்க வருகிற **27, 28—12—57** வெள்ளி, சனிக்கிழமைகளில் கூடப் போகின்றனர்; இங்குக் கூடியிருக்கும் வடநாட்டு சேட்டுகளை அண்மையில் விரட்டுவதற்கு வழிவகை காணப் போகின்றனர்; கண்ட வழிவகைகளை அனைவருக்கும் எடுத்து விளக்கப் போகின்றனர்!

நாகர்கோவில்—இந்தப் பெயரைக் கேட்டதும் நம் மனக் கண்முன் தெரிவது தமிழகத்தோரின் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைத்த கலைவாணர்தான்!

ஆனால் நாஞ்சில் மாவட்டத்திலே காலடி வைக்கும் நம்மையெல்லாம் கைகொடுத்து வரவேற்று நகைச் சுவை விருந்தளிக்க அந்தக் கலை வேந்தர் இல்லை இன்று! இருந்தும் அவர் பெயர் 'கொண்ட' மாபெரும் பந்தலிலே; தூக்குத்தடி தந்த தூய நறுந் தொண்டன் கே. வி. கே. சாமியின் அரங்கிலே அவர்கள் நினைவோடுதான், நாம் கூடப் போகிறோம்.

மாநாட்டின் தலைவர்—நமது தலைவர் பெற்ற செல்வம் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள். டெல்லி மாநகரத்துப் பாராளு மன்றத்திலே திராவிடத்து விடுதலைப் படையின் சார்பாக முதல் முழக்கமிட்டு; 'மமதையாளரே, கேட்டீர்! தென்னகத்திலே நீடுதுயில் கொண்டிருந்த கொடட்புலி துயில் விழித்துக் களம் புகு முன்னர் கிளம்பிடுவீர் நாட்டை விட்டு—என அதிர்வேட்டுக் கிளப்பிய அறிவியக்கத் தூதுவன்! அவரது தலைமை மாநாட்டிற்கே பெருமை!

மாநாட்டைத் திறந்து வைப்பவர் மதுரை டாக்டர் ஏ. அருணாசலம் அவர்கள். உடலைப் பிடித்த நோய்களைப் போக்குவது மட்டும் டாக்டர்களது வேலையல்ல; நாட்டைப் பிடித்தாட்டும் நோய்களின் மூலகாரணம் கண்டு அவற்றை முறியடிப்பதும்தான் அவர்களது கடமை—என்று மருத்துவத் தோழர்களுக்கெல்லாம் உணர்த்துவதைப் போல்; உருத்துகின்ற வடநாட்டு முள்ளதனை எடுத்தெறிய வந்திருக்கும் கெழுதகை நண்பர்!

மதுரை மாவட்டத்திலே அவர் 'கைராசிக்காரர்', என்று சிறப்புப் பெயர் பெற்றிருப்பவர்.

அவர் திறந்து வைக்கும் 'கைராசி'யால் நாஞ்சில் மாநாடும், அதைத் தொடர்ந்து கூடும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழுவும் புத்தம் புதிய தீர்மானங்களை நிறைவேற்றப்போகின்றன!

இந்த மாநாட்டின் செயலாளர்கள் செயலொன்றையே மூச்சாகக் கொண்டு இரவையும் பகலாகக் கருதிக் கழகப் பணி ஆற்றிடும் அருமை நண்பர்கள் ஏ. இராமசாமி—பி. சாம், பி. ஏ. பி. எல். ஆவார்கள்!

பாண்டியன் மீசை கொண்டு படை நடத்தும் பான்மை பெற்ற நண்பர் சி. மனோகரன், எம். ஏ. அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவர்.

மனோகரன் மனமுவந்து அழைக்கிறார் கேரளத்தின் நுழைவு வாயிலிலே இன முரசு கொட்ட வாரீர் என்று!

இத் திங்கள் **27, 28** தேதிகளில் நாஞ்சிலில் குடியேறி, அறிஞர் அண்ணா, நாவலர், மற்றும் கழகத் தோழர்களின் கர்ஜனை கேட்டது நமது கடமையன்றோ!

நாடாள்பவர் 'சினிமா' எடுக்கிறார்; நகைப்போரே; என்ன சொல்கிறீர்?

சென்ற தேர்தலின்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கணக்கைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்று சூளுரைத்துக் கொண்டு சில கட்சிகள் செயல்புரிந்தன. அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மேல் சாட்டிய குற்றங்களுள்—கூறிய குறைகளுள் குறிப்பிடத் தக்கவை இரண்டு. ஒன்று 'பாரத மாதாவை துண்டாட விரும்பும் மாபாவிகள்' என்பது. அடுத்தது 'இவர்கள் கூத்தாடிகள்' என்பது. அவர்கள் கூறிய இரு குற்றங்களையும் திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கையாகவும், கட்சியின் குணநலன்களில் சிறந்தவையாகவும் கருதுகிறது.

''நாடகமாடிகள் நாடாளலாமா?''—திரு. காமராசர் சென்ற இடத்திலெல்லாம் கேட்க மறக்கவில்லை. 'சினிமா கட்சிக்காரர்கள் சட்டசபைக்குப் போகலாமா?''—நாம் இருந்த இடம் 'ஏளனம்' செய்தது. ''திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூத்தாடிகள்; கதை எழுதுபவர்கள்''—தமிழ்நாட்டுக் காங்கரசுத் தலைவர் திரு இராசாராம் நாயுடு பேசினார். ''சினிமாவை விடு, சிலம்பை எடு''—விடுதலையார் வேண்டுகோள் விடுத்தார்.

சென்ற நவம்பர் திங்கள் 29-ல் கோபிசெட்டிப்பாளையம் பெரியார் திடலில் பேசிய திருமதி குழந்தை அம்மையார் ''தி. மு. கழகத்தவர் கூத்தாடிகள். கூத்தாடும் அந்தக் கூட்டம் சமயத்துக்குத் தகுந்தபடி—ஆளுக்குத் தகுந்தபடி' 'எல்லாம் வேஷம் போடுகிறார்கள்'' என்று கூறி தன் குழந்தைத் தன்மையை, குறைமதியை வெளிப்படுத்தியுள்ளார். பொறுமையால் கூறுவோரும், இயலாமையால் ஏங்குவோரும், பொச்சரிப்பால் பொருமுவோருமாக உள்ள இக்கூட்டம் நமது பரிதாபத்தையும் அனுதாபத்தையும் பரிசாகப் பெறுகிறது. இவர்களெல்லாம் ஒரு பக்கம் இப்படி பேசித் திரியும் வேளையிலேயே மற்றொரு பக்கம் கலைத்துறையும், திரையுலகும் பல திருப்பு முனைகளை சந்தித்து, புதிய வளர்ச்சி பெறுகிறது.

சென்ற மே திங்களில் சென்னை உயர்நீதி மன்றத்தில் பணிபுரியும் வழக்கறிஞர்கள், 'சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி முன்னிலையில் ''வழக்கறிஞர்கள் நாடக மன்றம்'' என்ற பெயரில் நாடக மன்றம் ஒன்றைத் துவக்கியுள்ளார்கள். அப்பொழுது பேசிய தலைமை நீதிபதி திரையுலகையும், நாடகத்தின் தேவையையும், அது நாட்டுக்குச் செய்கின்ற தொண்டுகளையும் சுவையும், பயனும் குன்றாமல் குறையாமல் விளக்கிப் பேசியுள்ளார். கல்லூரிப் படிகளிலே ஏறி இறங்கி கற்றுத் தேர்ந்த வழக்கறிஞர்கள் ஓய்வு நேரங்களில் நல்ல கருத்தோகிரும் ''நாடகங்களை நடத்திக் காட்டப்போகிறார்கள் 'கூத்தாடும் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் வாதிடும் உரிமையற்றவர்கள்' என்ற சட்டம் திரு காமராசரால் கொண்டுவரப்பட்டு திருமதி குழந்தை அம்மையார் ஆதரவோடு சட்டசபையில் நிறைவேறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அரசியல் தலைவர் ஒருவர் கதாசிரியராகப் போகிறார் என்றால் இங்குள்ள குருசாமிகளுக்கும் காமராசர்களுக்கும் ஆச்சரியமாகக் கூட இருக்கும்.

பர்மா முதல்வர் யூ நூ ஒரு நாடக ஆசிரியர் என்ற செய்தி பலரையும் வியப்பிலாழ்த்தும். பர்மாவின் அரசியல் நிலைமையைப் பின்னணியாக்கிக்கொண்டு ஒரு நாடகத்தை அமைத்தார். 'லூது ஆந்தான்' அல்லது 'மக்கள் வெல்லுகிறார்கள்' என்ற இந்த நாடகம் சென்ற பிப்ரவரி திங்கள் 27-ம் நாள் அமெரிக்காவில் நூல் வடிவில் வெளியிடப்பட்டது. ஐந்து அங்கங்களைக் கொண்ட இந்த நாடகத்தில் வெள்ளையரை வெளியேற்றி பர்மா விடுதலை பெற்ற விபரம்-சுதந்திர பர்மாவில் ஏற்பட்ட கலகங்கள், குழப்பங்கள்—குழம்பிய குட்டையில் இலாப மீன் பிடித்த அரசியல் சூதாடிகள்—பலாத்காரங்களையும் பயங்கரச் செயல்களையும் தூண்டிவிட்ட துரோகிகள்—பழமைக் காட்டில் நின்றபடி மக்களால் பேசப்பட்ட பயனற்ற தத்துவங்கள்—இந்த பூசல்களுக்கிடையே பொதுவுடைமை இரஷ்யாவின் தலையீடு—இதை சகிக்காத பொது மக்களின் முறையீடு—இந்தக் கொடிய சூழலிலிருந்து நாட்டைக் காப்பதற்கு மக்கள் கொட்டிய குருதி—அவர்களுடைய குறிக்கோள் வெற்றி பெற்ற நிலைமை—இவைகளையெல்லாம் தித்திக்கும் தேன் சுவையோடு, தெவிட்டாத அழகு நடையில் உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிமிகு கட்டங்கள் பல ஊடுருவித் தோன்ற, எண்ணத்தைத் தூண்டும் வண்ணம், படிக்கவும் நடிக்கவும் ஏற்ற வகையில் அமைத்துள்ள அவர் திறமை போற்றிப் புகழுதற்கேற்றது. வசனங்களின் அமைப்பும், வார்த்தைகளின் ஜொலிப்பும், பாத்திரங்களின் படைப்பும் கிழவனையும் குமரனுக்கும் வன்மை பெற்றவை. இந்த ஒரு நாடகத்தின் மூலம் உலக நல்லறிவாளர்களின் பெரு மதிப்பிற்குரியவராகிறார் யூ நூ. நாட்டின் முதல்வர் நாடகம் தீட்டுகிறார், பர்மாவில்! ஆனால் இங்கேயோ நாட்டு முதல்வர் நாடகம் எழுதும் திறமையற்றவராக மட்டுமல்ல; நாடகம் வரைவோரை தூற்றித் திரியும் தன்மை பெற்றவராகவும் விளங்குகிறார். அவருக்கு நம் அனுதாபம் உரித்தாகுக!

அண்மையில் சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் தமிழ் ஏடாம் 'தமிழ் முரசு' நம்மையெல்லாம் ஆனந்தக் கடலில் அமிழ்த்தும் நல்லதொரு செய்தியை நாட்டுக்குத் தந்துள்ளது. அந்தச் செய்தி 'வெட்டாத கத்தியினை வீசாக்கையால் வெட்டிக் கொன்று தூக்கி நமை வீழ்த்தப் பார்க்கும்'' வகை கெட்டவர்களை எள்ளி நகையாடத் தூண்டுகிறது. ''முதல்வர் துங்கு அப்துல் ரஃமான் ஒரு திரைப்பட டைரக்டராக மாறுவது ஒரு சுவையான நிகழ்ச்சி'' என்று வெளியிட்டு வியப்புறுகிறது 'தமிழ் முரசு'!

அண்மையில் ஆங்கிலேயர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட மலேயாவின் முதல்வர்தான் துங்கு அப்துல் ரஃமான். அவர் புதிய முதல்வர் மட்டுமல்ல; புகழ் சான்ற எழுத்தாளருங்கூட. அவரது எண்ணத்திலே மலர்ந்து, இதயத்திலே வளர்ந்து, எழுத்திலே மிளிர்ந்த 'மசூரி' என்னும் நாடகத்தை சிங்கப்பூரிலுள்ள கத்தே என்னும் திரைப்பட தயாரிப்பு நிலையத்தினர் சினிமாப் படமாக்க ஆசை கொண்டுள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள திரைப்படத் தயாரிப்பு நிலைய உரிமையாளர் திரு. லோக்வான் மலேயா முதல்வர் திரு. துங்குவைப் பேட்டி கண்டு படமாக்கும் உரிமை கேட்டார். திரு. துங்கு அப்துல் ரஃமானும் உடன்பாடு தெரிவித்துள்ளார். திரு. லோக்வான் அவர்களின் முயற்சிக்குத் தன் குன்றாத ஒத்துழைப்பையும், குறையாத ஆதரவையும் என்றும் தருவதாக உறுதி கூறியுள்ளார். நாடகமாக எழுதப்பட்ட அக்கதையை திரைப்படமாக்குமுன் சில பகுதிகளில் சிறு மாற்றங்கள் செய்ய வேண்டுமென்றும் அதைத் தானே செய்து முடித்துத் தருவதாகவும் கருத்துத் தெரிவித்துள்ளார். அதோடு திரைப்படத்தின் டைரக்டராகவும் தானே பணியாற்ற விரும்புவதாகவும் கூறி திரு. லோக்வான் அவர்களின் ஒப்புதலைக் கேட்டுள்ளார். ஆடையணி அலங்காரங்களுக்கு ஆலோசகராகவும் அவர் பணிபுரிவார் என்று தெரிய வருகிறது.

மசூரி என்னும் அவரது நாடகத்தின் அடிப்படைக் கருத்து புதுமையானது.

அடிமையாக வாழ்ந்த மக்கள் கொடுமையை எதிர்த்துத் தமது உரிமையை நிலைநாட்டிய கதை இது. மலேயாவில் ஓரிடத்தில் வாழ்ந்த ஓர் இளவரசன், மிகக் கொடுங்கோலனும். அந்தக் கொடியவனின் வாழ்க்கையையே சுற்றி ஓடுகிறது இக்கதை. முன்னொரு காலத்தில் லங்காவித் தீவில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளே இந்த நாடகத்தின் அடிப்படை.

பண்டைக் கால பழக்க வழக்கங்களையும், ஆடை அணிகளையும் அப்படி அப்படியே காட்டும் வகையில் இந்தத் திரைப் படம் அமைய வேண்டும் என்று அப்துல் ரஃமான் ஆசைப்படுகிறாராம். எனவே வேறு யார் கையிலாவது பொறுப்புகளைக் கொடுத்தால் அவர்கள் கதையைக் கெடுத்து விடக்கூடும் என்ற அச்சத்தின் காரணத்தால் திரைப்பட சம்பந்தமான முக்கிய பொறுப்புகளையெல்லாம் ஏற்க அவர் முன் வந்திருக்கிறார். துங்கு அப்துல் ரஃமானின் திரையுலகப் பிரவேசம் திரையுலகில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. நாமெல்லாம் கேட்டு மகிழும் இச் செய்தி, 'நாடகமாடிகள் நாடாளலாமா?' என்று கேள்வி எழுப்பும் பரிதாபத்திற்குரியவர்களைத் தலை குனிய வைக்கிறது

அந்நாட்டிலுள்ள நிகழ்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டு மக்களின் நலத்தை நாடுவதாக அமைகின்ற காரணத்தால்தான் 'நாடகம்' என்று பெயர் பெ[illegible]போலும். நாடகம், திரைப்படம், ஓவியம், சிற்பம், நாட்டியம், இசைபோன்ற கலைகளின் மூலம்தான் பழமைக் கருத்துக்கள் மக்கள் மத்தியில் வேர்விட்டன. பழமைக் காட்டில் புதுமை எண்ணங்களை வளர்க்க வேண்டுமென்றால் கலையைக் கைக் கருவியாகக் கொள்ள வேண்டும். 'கலை கலைக்காகவே' என்ற நிலைமை மாறி 'கலை வாழ்க்கைக்காகவே' 'கலை மக்களுக்காகவே' என்ற தத்துவங்கள் இப்பொழுது வெற்றி பெற்று வருகின்றன. கருத்தற்ற கலை காகிதப்பூ என்ற எண்ணம் இன்று நல்லறிவாளர்களின் உள்ளங்களிலெல்லாம் நடமாடுகின்றது.

திரையுலகம் நல்லதொரு திருப்பு கட்டத்தை சந்தித்துள்ளது. அறிஞர் பெருமக்களும் அரசியல் வல்லுநர்களும் கலைத் துறையில் ஆர்வமும் அக்கரையும் கொண்டு பணிபுரிய முன்வந்துள்ளனர். மகிழ்கிறோம். இந்நிலை வளர்க; வாழ்க என்று வாழ்த்துகிறோம்!

நாடாள்பவர் படமெடுக்கிறார் அங்கே! ஆனால் அவரையும், அவரது கட்சியினரையும் யாரும் அங்கே 'சினிமாக் கட்சியினர்' என்று கேலி செய்யவில்லை! இங்குள்ளோர் அது கண்டு நாணித் தலை குனியட்டும்!

—நாஞ்சில் அன்பெழில்

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக் குழுக் கூட்டம்

29-12-57 ஞாயிறு அன்று நாகர் கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை
2—12—57

தலைமைக் கழகம் (தி. மு. க.)

முகவரி மாற்றம்

கழகத் தோழர்களும், நிர்வாகிகளும் கீழ்க் கண்ட முகவரிக்கே தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

கோ. செங்குட்டுவன்,
40, பத்திரையன் தெரு,
சென்னை—1.

[அவலம், துரோகத்தை நாடி ஓடியது. இரத்த பாசம், தியாக முனையை நோக்கிச் சென்றது. எதை விடுவாள்; எதைத் தொடுவாள்? துரோகமும் இழைத்தாள்; தியாகமும் செய்தாள்!]

★ நீல விழிகள் ★

அமைதி! கற்பனைக்கே எட்டாத கானல் நீராகி விட்ட அந்த ஒன்றுக்காகத்தான் இறுதி வரை அலைந்தாள் அவள்! உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த வேதனைப் பிழம்பில் அவள் விரும்பிய அந்த அமைதி வெந்து கருகி விட்டது! என்றோ—நாற்பதாண்டுகளுக்கு முன், அறியாமையாலோ - பொறாமையாலோ இழைத்து விட்ட ஒரு தவறு அவளை அமைதியோடு வாழவிடவில்லை! அவள் முகத்தில் விழுந்த சுருக்கங்கள், முதுமைக் கோலத்தை மட்டுமல்ல—வேதனைக் கீரல்களின் பெருக்கத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன!

அன்று தீட்டாத வைரத்தை வலுவில் ஒளி வைரமாகத் தீட்டிக் கொள்ளத் துடித்தாள்! முத்தெடுத்த சிப்பியில் முத்தெங்கே இருக்கும்? விளைவு, தன்னால் மீட்டாத வீணையாகி விட்ட 'உடன் பிறப்'பின் அமைதிக்காகத் தன்னையே இறுதி வரை தீட்டாத வைரமாக்கிக் கொண்டாள்! பாவம், பரிதாபத்திற்குரியவள்!

வாழ்வின் எல்லைக் கோட்டில் விளையாடிக் கொண்டிருந்தாள் மார்கரெட்!

புரண்டு படுத்தாள்! எதைக் காணக்கூடாது என்று அடிக்கடி நினைத்தாளோ, அதுதான்—அந்த நிழற் படம்தான் அவள் பார்வையில் பட்டது! அந்த நிழலோவியத்தைக் காணக்கூட அவள் உள்ளம் கூசியது. "ஹென்றி! என்னை மன்னிக்க மாட்டாயா? மரணம் விரித்த மஞ்சத்தில் புரள்கிறேன் நான்; எனக்கு அமைதியைத் தரமாட்டாயா ஹென்றி?"—அவள் இதயத் துடிப்பு ஒவ்வொன்றும் இதைத்தான் எதிரொலித்துக் கொண்டிருந்தது!

ஹென்றி! அந்த ஒளி விளக்கு இன்றில்லை. அது அணைந்து—அவர்கள் வாழ்வில் இருள் கவிந்து — பல ஆண்டுகள் மறைந்து விட்டன!

மார்கரெட்டின் உடன் பிறந்தவள்—மூத்தவள், சூசென்!

விலக்கிற்கு ஒன்றிரண்டைத் தவிர, ஒரு ஆணும், பெண்ணும் இறுதிவரை நட்புடன் இருத்தல் என்பது நடைமுறையில் இயலாத ஒன்று! காரணம், அவர்கள் கொள்ளும் நட்பே, காதல் உலகின் முதற்படியாக உருவம் பெற்றுவிடுகிறது!

நட்புறவு என்ற முறையில், சூசெனுடன் கொண்ட தொடர்பு, அடிக்கடி அவள் வீட்டுக்கு வந்து போகும் அளவுக்குக் காதலாக வடிவம் பெற்றது! ஹென்றியின் வரவு, சூசெனைவிட மார்கரெட்டுக்குத்தான் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஹென்றியின் வரவும்—தன்னுடன் கொள்ளும் உறவும்—சூசெனைப் பின்னணியாகக் கொண்டே இயங்குகின்றது என்பதை உணரத் தவறி விட்டாள் மார்கரெட்! மனைவியாகப் போகிறவளின் தங்கை—தனக்கு உறவுக்காரி என்ற முறையில் ஹென்றி தன்னுடன் சிரித்துப் பேசிப் பழகியதை அவள் தவறாகப் புரிந்துகொண்டாள்!

● ● ●

மார்கரெட், ஹென்றிக்காகக் காத்திருந்தாள்! ஆனால்

ஹென்றி சூசெனுக்காக வந்தான்! சூசெனைக் கண்டபொழுது என்றுமில்லாத ஒரு கவர்ச்சியை அன்று அவளிடத்தில் கண்டான் ஹென்றி! ஆனால் அன்று அவன் ஏறிட்ட நோக்கு—பழகிய போக்கு — பேசிய பேச்சு—அனைத்தும் ஏக்கத்தின் தேக்கமாகவே இருந்ததை அவளால் உணராமலிருக்க முடியவில்லை; காரணம் கேட்காமலும் இருக்க இயலவில்லை!

"என்ன சூசென்! ஏனிந்த வாட்டம்?"

"ஒன்றுமில்லை ஹென்றி...!"

"எதையோ ஒளிக்கிறாய்! எனினும் கூறச் சொல்லி நான் ஒன்றும் வற்புறுத்தவில்லை, சூசென்......!"

"இன்னும் எத்தனை நாளைக்கு இந்த வாழ்க்கை? காலம் நம்மை முதுமைக் கோலத்தில்கொண்டு செல்வதை நீங்கள் உணரவில்லையா ஹென்றி?"—அவள் விழிகளில் தேங்கித் திரையிட்டு நின்ற கண்ணீரைக் காணப் பொறுக்காமல் அவளை அணைத்துக் கொண்டான் ஹென்றி!

"புரிகிறது சூசென்! உன் இதயத்தின் அடித்தளத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் காதல் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாத அளவுக்கு நான் உணர்ச்சியற்றவனல்ல, சூசென்!" — அவன் பேச்சிலிருந்த உறுதி, நடக்கப் போகும் திருமண நிகழ்ச்சியின் எதிரொலியாக இருந்தது!

மார்கரெட்டின் சிந்தனை, ஹென்றியின் வரவால் தடைபட்டது. தனக்கும், சூசெனுக்கும் அடுத்த கிழமை திருமணம் என்று அவளிடம் கூறியபோது, அவளுக்கு ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. உலகின் சுழற்சி நெறிபுரண்டு விட்டது போல் தோன்றியது அவளுக்கு! திகைப்பும் தெளிவின்மையும் அவள் உள்ளத்தைக் கலக்கி விட்டன. வேதனையால் குமைந்தது அவள் உள்ளம். ஹென்றி—சூசென் தொடர்பு திருமணத்தில் போய் முடியும் என்று அவள் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை! நனவாக வேண்டிய கனவு, கனவாகவே முடிந்து போனதை எண்ணி எண்ணி அவள் இதயம் குமுறியது!

இரக்கம் வழியும் விழிகளோடு ஹென்றியை ஏறிட்டு நோக்கினாள்! ஏக்கமும், ஏமாற்றமும் படிந்திருந்த அவள் பார்வையின் பொருளை ஏனோ அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் நடந்து கொண்ட முறை அவனுக்கே விளங்காத புதிராக இருந்தது.

"என்ன, மார்கரெட்! ஏன் இப்படிப் பார்க்கிறாய்?"—வியப்பையும் வினாவையும் உள்ளடக்கிக் கொண்டிருந்தது அவன் கேள்வி. அவனிடம எதைப் பேசுவது—எப்படிப் பேசுவது என்றே புரியவில்லை அவளுக்கு.

"ஒன்றுமில்லை ஹென்றி...... முடிவு அதுவெனில் மிக்க நன்றி......!"—எப்படியோ தட்டுத் தடுமாறி சொற்களைக் கொட்டிச் சமாளித்துக் கொண்டாள்!

● ● ●

ஹென்றியின் வேலைக்காரி கூறிய செய்தி, சூசெனை விட மார்கரெட்டுக்குத்தான் தாங்க முடியாத அதிர்ச்சியாக இருந்தது! ஹென்றியின் அவல முடிவை சூசென் எதிர்பார்த்தவள் இல்லையே!

"இறுதியாக அவர் ஏதும்?"—சூசெனால் இதற்குமேல் ஒன்றும் பேச முடியாமல் துக்கம் நெஞ்சின் குறுக்கே அணை கோலி விட்டது!

"ஒன்றும் சொல்லவில்லையம்மா! நேற்று உங்களைப் பார்த்து விட்டு திரும்பிய பின் கூட சலனமற்றுதான் காணப் பட்டார். நள்ளிரவு நேரத்தில் மாரடைக்கிறது என்று இரு முறை வாந்தி எடுத்தார். நீர் கொண்டு வருவதற்குள்......"

கண்ணீரை ஆறுக்கினாள் சூசென். ஹென்றியின் முடிவை எண்ணி மார்கரெட் வேதனையால் விம்மினாள்! சூசெனைக் கண்டதும், பொங்கி எழும் அழுகையை அடக்க முடியாமல் குலுங்கிக் குலுங்கிக் கதறினாள்! மார்கரெட்டின் நிலை சூசெனுக்குப் பரிதாபமாக இருந்தது!

"பைத்தியம்! நீ ஏன் மார்கரெட் கலங்க வேண்டும்? இன்று வரை ஹென்றிக்காக வாழ்ந்தேன்! இனி உனக்காக வாழப் போகிறேன்! உன் வாழ்வு வளம் பெற்றால் அதுபோதும் எனக்கு!"—இதைச் சொல்லித் தான் அவளால் அமைதி பெற முடிந்தது.

ஹென்றியின் மரணம், சூசெனின் வாழ்வைச் சூனியமாக்கி விட்டது. மறுமணத்தைப்பற்றி மார்கரெட் பேசியபோதுகூட உள்ளத்தோடு ஒன்றி விட்ட ஹென்றியின் ஓவியத்தைத் தன் இதயத்திலிருந்து அழிக்கத் தனக்குத் துணிவில்லை என்று கூறிவிட்டாள், சூசென்! தன் வாழ்வுதான் பாலையில் பட்ட மரமாகி விட்டாலும், தங்கையாவது வாழட்டும் என்று அவள் உள்ளம் ஏங்கியது. மார்கரெட், தன் திருமணத்திற்குப் பின் சூசெனுடன் வாழ முடியாது என்று எண்ணினாள்! ஏற்கனவே ஹென்றியின் பிரிவால் உள்ளம் நொந்து போயிருக்கும் சூசெனை, தன் பிரிவு மரணத்தை முத்தமிடச் செய்து விடும் என்று நடுங்கினாள் மார்கரெட்! சூசென், மார்கரெட்டின் திருமணத்தைப்பற்றிப் பலமுறை வலியுறுத்தி — வற்புறுத்தியும் கூட, தனக்குத் திருமணத்தில் விருப்பமில்லை; சூசெனுக்குத் துணையாக இறுதிவரை இருப்பதைத் தவிர வேறெதையும் தான் விரும்பவில்லையென்று—தெளிவும் உறுதியும் கலந்த குரலில், திட்ட வட்டமாகக் கூறி விட்டாள் மார்கரெட்!

சோலைவனத்து வண்ண மலர் மார்கரெட், பாலைப் பனி மலரானாள்!

● ● ●

ஆண்டுகள் பல மாண்டு மடிந்து கொண்டிருந்தன! மார்கரெட் அந்த நிழலோவியத்தைக் கண்டபோது, ஏனோ ஒட்டம் ஒடுங்கி உறுதியற்றுப் போன அவள் கட்டுடல் நடுங்கியது! மீண்டும் மறுபக்கம் புரண்டு படுத்தாள்! யாரையோ அவள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்!

"அக்கா...!"-அவள் உதடுகள் மெல்ல ஒலித்தன. எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தி காற்றில் அலை மோதிக் கொண்டிருந்தது. கண்களில் கசிந்த நீரைத் துடைத்துக் கொண்டு கதவைச் சற்று திறந்த நிலையில் மூடிவிட்டு தங்கையின் அருகில் வந்து நின்றாள் சூசென்!

"இப்பொழுது எப்படி இருக்கிறது மார்கரெட்?"-சூசெனின் குரல் நம்பிக்கையற்று ஒலித்தது!

"ஏனக்கா கலங்குகிறாய்? அரணழிந்த அமைதிக் கோட்டையை, சாவின் எல்லையிலே காணப் போகிறேன்; கலங்காதே அக்கா! உன் ஆத்ம சாந்திக்காக என்னைக் கருவியாக்கிக் கொள்ள எண்ணினேன்; வாழ்ந்து விட்டேன்!

"ஆலய மணி ஒலிக்குமுன், ஆண்டவன் பிரதிநிதியாக, அடையப் போகும் ஆத்மாவின் பாவக் கறையைப் போக்க பாதிரியார் வருமுன், இதயத்தை அழுத்திக் கொண்டிருக்கும் வேதனைச் சுமையை வெளிப்படுத்தினால்தான், என் உள்ளம் அமைதி பெறும்...!"

"அமைதியாக இரு மார்கரெட்!"

"இடையில் குறுக்கிடாதிருந்தால் என் கதையை விரைவில் முடித்துக் கொள்கிறேன்! நாற்பதாண்டுகளுக்குமுன் ......அந்த சோக நிகழ்ச்சியை எனக்காக மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார், அக்கா!

"அப்போது எனக்கு வயது பதினாறு! பருவ உணர்ச்சிகளின் சுழலில் சிக்கித் தவித்த அந்த வயதில்தான், ஹென்றி என் விழிகளுக்கு விருந்தானார்! ஹென்றியின் துவக்க[illegible] தொடர்பு, என் இதய வேதனையைத் தீர்க்கும் மருந்தாக அமையும் என்று எதிர்பார்த்தேன்—ஏங்கினேன்! ஆனால் ஒரு நாள் கூட அவர் பார்வையில்—பேச்சில், என் உள்ளத்தை உணர்ந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. நான் விரும்பியதை

[தொடர்ச்சி பக்கம்—8]

மூலம்: [illegible]ப்பசான்

தமிழில்: இரா. கோதண்டராமன்



அறிமுகம்

கதை சொல்லும் முறை பலவகை!

திடீரென்று ஒரு வீட்டில் நடு ராத்திரியில் ஒரு பயங்கர சப்தம் கேட்கிறது. தெருவிலுள்ளோர் அனைவரும் பரபரப்போடு அங்கு ஓடுகிறார்கள். வீட்டுக் கதவு திறந்திருக்கிறது. விளக்கு மங்கலாக எரிகிறது. யாரோ முணகிடும் சப்தம் காதில் விழுகிறது. சிறிது நேரத்தில் அந்த ஒலியும் நின்று விடுகிறது. விளக்கைப் பெரிதாக்கிப் பார்த்தால் சுந்தர வடிவுடையாள் ஒருத்திப் பிணமாகக் கிடக்கிறாள். அவளை ஊரார் அறிவர். ஊருக்கே அவள் மகாலட்சுமி எனப் போற்றிப் புகழ்வர். அவள் பிணமாகிவிட்டாள். அவள் கணவனையோ காணவில்லை. அவன் எங்கே போனான்? அவள் ஏன் கொலை செய்யப்பட்டாள்? இந்தக் கேள்விக் குறிகளிலேயிருந்தே கதையின் சிக்கல்கள் ஆரம்பமாகிவிடும்.

நல்ல நிலாக் காலம்! வானம், வெள்ளியை உருக்கி வார்ப்பது போல்... உலகமெங்கும் ஒளி பெற்றுத் திகழ்ந்தது. புள்ளினங்கள் தங்கள் கூடுகளில் தங்கி ஓய்வு பெற்றுக் கொண்டிருந்தன. அந்தக் கிராமமே அமைதி மங்கையின் அணைப்பில் மயங்கிக் கிளைவிழுந்திருந்தது. தெருக்களில் குங்கும நிறத்துப் பாதிரிப் பூக்கள் இறைந்து கிடந்தன. [illegible] நில வொளியில் தன்னந்தனியாக ஒரு அழகி மெல்ல நடந்து கொண்டிருந்தாள். அவள் யார்? அவள் முகத்திலே வேதனை ரேகைகள் படர்ந்திருக்கக் காரணம் என்ன? இப்படியும் கதைகள் துவங்குவதுண்டு.

கதையின் மையக் கட்டத்திலேயிருந்து தொடங்கி, முன்னும் பின்னும் வாசகர்களை இழுத்துச் செல்லும் முறையில் கதையில் நடமாடுபவர்களைப் பற்றிய குறிப்புகள் முன் கூட்டியே அறிவிக்கப்பட வேண்டியதில்லை.

'சுருளிமலை' கதை, நிகழ்ச்சிகளின் மையக் கட்டத்திலேயிருந்து உருவாவதில்லை. ஒரு சிற்றூரின் வரலாற்று மையத்திலேதான் தோன்றுகிறது. அந்த ஊரிலுள்ள முக்கியப் புள்ளிகளின் மத்தியில் சுழன்றோடும் நிகழ்ச்சிகளே சுருளிமலை கதையின் கருப் பொருள். ஆதலால் [illegible]ப் பற்றிய அறிமுகம் [illegible]

எல்லா குக்கிராமங்களையும் சிற்றூர் என்றே அழைக்கிறோம். ஆனால் இந்தக் கதையிலே வரும் சிற்றூருக்குப் பெயரும் சிற்றூரே!

இப்போது சிற்றூரில் நுழைவோம். கட்டை வண்டியில் ஏறிக்கொண்டுதான் அந்த ஊருக்குள் பிரவேசிக்க வேண்டும். அல்லது நடந்து செல்ல வேண்டும். அவ்வளவு நொடி நிறைந்த பாதை. குறுக்கும் நெடுக்குமாகப் பெரும் பெரும் பள்ளங்கள். இன்னல் பலவற்றைக் கடந்துதான் இன்பம் பெறவேண்டியிருக்கிறது என்ற இலக்கணத்தை மெய்ப்பிப்பது போல் அழகும் வளமும் மிக்க ஊர் சிற்றூர். ஊரின் முகப்பிலேயே செவ்விளநீர்க் குலைகளுடன் வான்நோக்கி வளர்ந்திருக்கும் தென்னஞ்சோலை! அதனுள் அமர்ந்து விட்டால் மேனியை மெல்ல வருடித் தாலாட்டும் குளிர் தென்றல்! அதைக்கடந்து உட்சென்றால் எடுப்பான சிவன் கோயில்—காளி கோயில்—மாரி கோயில! திருக்குளம்—அதனைச் சூழ்ந்து நான்கு தெருக்கள்! பட்டு விரித்தாற்போல் பச்சைப் புற்றரைகள்! அவைகளையொட்டித் தலையாட்டும் தங்க நிற நெல் மணிகள் குலுங்குகின்ற எழிற் கழனிகள்!

சிவன் கோயில் மணியோசை-இசை முழக்கம்—காளி மாரி கோயில்களில் பம்பை, உடுக்கைகளின் ஓங்கார ஒலிகள்—செக்காடும் சப்தம் — கூடைக்காரிகளின் வியாபாரக் குரல்கள்—கோலியடிக்கும் பிள்ளைகளின் இரைச்சல்—மாந்தோப்பின் நடுவில் அமைந்த பள்ளிக்கூடத்தில் பையன்கள் முழங்கும் வாய்ப்பாடு பாடத்தின் "கோரஸ்"! இப்படி ஊரே உயிர்ப்புள்ளதாகக் காட்சி யளிக்கும். அந்த ஊரில் நம் கதைக்குத தொடர்புடையவர்களில் தலையானவர்களைத் தேடுவோம். முதலில் நம் கண்ணில் படுவது, அதோ அந்தக் கோயில் காளைதான்!...

● சிவன் கோயில் காளை 'சிவா' என்றால் அதை யாரும் வெறித்துக் கூடப் பார்க்கமாட்டார்கள். பார்ப்பது 'பாபம்' என்பது மாத்திரமல்ல; அவ்வளவு பயம் அந்த ஊராருக்கு அதன்மீது! வீதியில் கம்பீரமாக ராஜ நடை போட்டுக் கொண்டு அது செல்லும்போது வீட்டோரங்களிலும், வேலிப் பக்கங்களிலும் ஒதுங்கி நின்று வியர்வையால் மேனியை ஈரமாக்கிக் கொள்வர், அவ்வூரார்! கொழுப் பேறிய உடல்-இரும்பினும் வலுவான கொம்புகள்—கருநீல மெனப் பளபளக்கும் ரோமம் அடர்ந்த தோல்—அந்த முரட்டுக் காளையின் கண்களிலே மட்டும் ஒரு கனிவு தென்படுகிறதென ஊரார் சொல்வர். ஆனால் அருகே நெருங்க அஞ்சுவர். பற்று, பாசம், பந்தம், சொந்தமெல்லாம் மனித இனத்துக்கு மட்டுந்தானா தனியுடைமை? மாடுகளுக்கு அவையெல்லாம் இல்லையா என்ன? சொல்லப் போனால் மனிதனைவிட அதிகமாக உழைக்கின்றன; அவனைவிட அதிகமாகத் தன்னை வளர்த்தவனிடம் விசுவாசம் காட்டுகின்றன.

பலநாள் வளர்த்துப் பணத்துக்காக வேறொருவனிடம் விற்றுவிட்டால் சாமான்யத்தில் அந்த வீட்டைவிட்டு நகருகிறதா மாடு! எத்தனை தடவை தன்னை வாங்கியவனை ஏமாற்றிவிட்டு முதலில் இருந்த இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது! விற்றவன் விரட்ட விரட்ட, இறுதியில் அதுவாக ஒரு முடிவுக்கு வந்து...தன்னை வெறுத்துப் பணத்தைப் பெரிதென மதித்தவனைவிட, பணம் கொடுத்துத் தன்னை விரும்பியவனே மேலென்ற தீர்மானம் செய்து கொண்டோ என்னவோ...வாங்கியவனிடமே அன்பு காட்டத் தொடங்கி விடுகிறது. அந்த மாட்டினத்தில் சிறப்பும் செழிப்பும் மலிந்த குடும்பத்தில் பிறந்ததுதான் கோயில் காளை சிவா! சிவாவை மக்கள் ஆண்டவனின் வாகனமென்றேகருதி மரியாதை செலுத்தினர். ஆனால் அதைத் தனக்கு வாகனமாக்கிக்கொண்டான். ஒரு சுட்டிப் பயல்—அவன்தான்......

● 'சுருளிமலை' யென்றதும் யாரோ பெரிய கொள்ளைக்காரன்-பக்காத் திருடன் என்றெல்லாம் எண்ணத் தோன்றும். பக்தர்கட்கோ, "சுருளி மலை மீதில் மேவும் சீலா! உன்னைத் தோத்தரித்தேன் சுப்ரமண்ய வேலா!" எனப் பாடத் தோன்றும். சுருளிமலைச் சாரல் இன்றைக்கும் திருடர்களும் குற்றவாளிகளும் மறைந்து வாழ்வதற்கான வசதியைஅளித்துக்கொண்டிருக்கிறதென மதுரை மாவட்டத்தார் கூறுகிறார்கள். நமது சுருளிமலையோ திருடர்களையும குற்றவாளிகளையும் சந்தியில் நிறுத்துகின்ற முயற்சிக்குத் தன்னையே அர்ப்பணிக்கின்றான்.

சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். தாய், தந்தை, ஒரு சகோதரி அவர்களே அவனுக்கிருக்கிற ஆதரவு. கோயில் காளை சிவாவைத் தவிர அவனுக்கு அந்த ஊரில் யாருமே நண்பர்கள் கிடையாது. சிவாவுக்கு அடுத்தபடியாக அவன் பிரியம் வைத்திருப்பது மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழல்மீதுதான்! சிவாவும், குழலும் இருந்துவிட்டால் அவனுக்குப் பசியேகூடத் தெரிவதில்லை. பதினைந்து வயது கூடச் சரியாக நிரம்பாத அவன்பால் குடும்ப பாரம் முழுவதையும் போடுவதற்கு விரும்பாவிட்டாலும், அவனிடமிருந்து சிறு உதவிகளையாவது எதிர்பார்த்தது அந்த ஏழைக் குடும்பம். அவனோ கோயில் காளை போலக் கவலையற்றுத் திரிந்தான். தந்தை திட்டுவார்—அடிக்க ஓடுவார்—அக்காள் அதைத் தடுத்து அழுவாள்—தாயோ வேதனைக்களமானாள். சோகப் புயலானாள். ஆனால் பெயர் என்னவோ பூஞ்சோலைதான்!...

பூஞ்சோலை

● மண் மிதித்து, பானை சட்டிசெய்து, வயிறு வளர்க்கும் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, உழைப்பொன்றே உலக இன்பமெனக் கொண்டு, நாற்பது ஆண்டுகளுக்கு மேல் நகர்த்திவிட்ட பெருமாட்டி—அன்பின் திரு உருவம்—குணக் குன்று—குடும்பத்தின் நிலை விளக்காய் ஒளிவிட்டுப் பெருமை கொண்ட பெண்ணரசு! பொன்னையா வீடென்றால் புரியாது யாருக்கும்—அவன் மனைவி பூஞ்சோலை பெயராலேதான் வீட்டுக்குப் பெயருண்டு அவ்வூரில்! யார் வீட்டில் உடல் நலிவு என்றாலும் பூஞ்சோலை அங்கிருப்பாள். பிள்ளைப் பேறா? பூஞ்சோலை அடியெடுத்து வைத்தாலே போதும்—சுகப் பிரசவந்தான் எனப் பெரியோர்கள் புகழ்ந்திடுவர். பொங்கலுக்குப் புதுப்பானை, புதிய சட்டி பூஞ்சோலை கையால்தான் வாங்க வேண்டும் என்ற பேச்சு அந்த வட்டாரம் முழுவதிலும் அடிபடும்.

மஞ்சள் முகத்தில் எடுப்பான குங்குமத் திலகம்—பெருநோக்கு—சாந்த முகம்—குடும்பத்தின் கவலையால் உள்ளத்தில் புயல்! சுருளிமலை அடங்காத பிள்ளையாகி விட்டானே என்ற ஏக்கம்—மகளுக்கு ஏற்ற வரன் கிட்டவில்லை என்கின்ற துக்கம்-அழகு திருக் குமாரிக்கு அணிகலன்கள் பூட்டிப் பார்க்க வேண்டுமென்கின்ற தனியாத ஆசை — மண்ணாலே [illegible] தென்றால் மலைபோல குவித்திருப்பாள் அணிமணிகள் பொன்னாலென்றோ செய்[illegible]

டும்—அதனால்தான் போலும் மனத் திருப்திக்காக மகளுக்குப் பொன்மணி என்று பெயராவது வைப்போம் என்று வைத்து விட்டாள்.........

பொன்மணி

● பூவார் சோலைப் புது மயில்! பொங்கும் இளமை எங்கும் சிந்தக் காட்சி தரும் கட்டழகு! மொட்டவிழா மல்லிகை போல் பல் வரிசை—வட்ட நிலா மண்மீது வந்ததுபோல் முகப் பொலிவு! அந்த அழகுச் சிலை மண்மீதும், சுடு நெருப்பின் ஜுவாலைதனை வீசுகின்ற சூளை மீதும் உழன்றதாலே இயற்கை எழில் மறைத்து ஏழை வீட்டு முற்றத்திலே ஏங்கியது. உலகம், தன் வீட்டோடும்—வீட்டுக்கருகே யிருக்கும் பானை வேகும் சூளையோடும்—அந்தப் பானைகளை விற்று வரத் தான் நடந்து செல்லும் ஊர்களோடும் முடிந்து விடுவதாகவே அவளுக்குத் தோன்றும். உடம்பு முடியாத தந்தை—உழைத்து உழைத்து உருமாறி விட்ட தாய்—ஊர் சுற்றும் தம்பி—இவர்களுக்கிடையே குடும்பப் பாச[illegible]கயிற்றினால் சுற்றி விடப்பட்ட பம்பரமாகச் சுழன்றாள் அந்தப் பாவை—பளிங்குச் சிலை!

கவலையெல்லாம் மறந்த அளவில் களிப்பு ஒருநாள் அவளை ஆட்கொள்ளும்-அதுதான் என்றைக்காவது அவள் தம்பி, அவள் பலமுறை கேட்டுக் கொண்டதற்கிணங்க ஊதுகின்ற புல்லாங்குழல் எழுப்புகின்ற இன்ப ஓசை! அவள் அப்போது கலாபமாவாள்—அதைக் கண்டு தாய் கண்களைக் குளமாக்கிக் கொள்வாள்—"என் தங்கத்தை அடையும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கிறதோ?" எனக் கேட்டுக் கொள்வாள்.

அப்போது, உள்ளிருந்து பொன்னையாவின் "லொக் லொக்" என்ற இருமல் சப்தம்-அவன் படும் மரணாவஸ்தை—அவர்களை வீட்டுக்குள் ஓடச் செய்யும்!......அந்த இருமலினூடே தந்தை, மகனைக் கண்டிக்கத் தொடங்குவான். இருமல் அதிகமாகும். தன்னால் தந்தைக்கு உயிர் வாதனை என நினைத்து சுருளிமலை வெளியேறுவான். அவனைத் தொடர்ந்து ஓடிக் கண்ணீருடன் திரும்புவாள் பொன்மணி! இந்த விசித்திரமான குடும்பத்தைப்பற்றித் தினந்தோறும் பலரிடம் திரும்பத் திரும்ப விமர்சனம் செய்யாவிட்டால் தூக்கமே வராது, தீச்சட்டி சிங்காரத்துக்கு!...

[illegible]டி சிங்காரம்

● பெயர் மட்டும் அல்ல; ஆளைப் பார்த்தாலே நெருப்பைப் பார்ப்பதுபோல்தான் இருக்கும். யாராயிருந்தாலும் எரிந்து விழுந்துதான் பேசுவான். எடுப்பான தோற்றமும் மிடுக்கான நடையும் கொண்ட அவனைக் கண்டு ஊரிலேயுள்ளவர்கள் சிறிது அச்சங் கொள்ளவே செய்வர். பேச்சு, தோற்றம், நடை உடை பாவனைகள்—இவைகளையெல்லாம் கண்டு அவனை ஒரு துஷ்டன் என்று யாரும் தீர்மானித்து விடக் கூடாது. கள்ளமில்லாத உள்ளம்—என்ன பேசுகிறோம்; ஏன் பேசுகிறோம், நாம் இப்படிப் பேசுவதால் யார் யாருக்கு மனசு புண்படும் என்பதைப்பற்றியெல்லாம் கவலைப்படமாட்டான். நினைத்ததை நினைத்து முடிப்பதற்குள் வெளியே சொல்லிவிட வேண்டும். இல்லாவிட்டால் தலையிலும் இருதயத்திலும் ஏதோ பெரிய பாரம் அழுத்துவது போலிருக்கும் அவனுக்கு!

காளி கோயிலில் ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவில் கதாநாயகனே தீச்சட்டி சிங்காரம்தான்! சிற்றூர் காளி கோயிலுக்கு மட்டுமல்ல; ஐம்பது மைல் சுற்றளவில் உள்ள எல்லா ஊர்களிலும் திருவிழாக் காலங்களில் தீச்சட்டி தூக்கி ஆடுவதற்கு சிங்காரத்திற்கு ஏகப்பட்ட கிராக்கி!

நல்ல வருமானம்—அநேகமாக மாதந்தோறும் அவனுக்கு வேலையிருக்கும். தீச்சட்டி தூக்குகிற நேரமின்றி மற்ற நேரங்களிலும் தீச்சட்டி ஆட்ட உடைகளை அணிந்து கொள்வதில் அவனுக்கு அடங்காத ஆசை. ஊரார் அவனைப் பார்த்து சில சமயங்களில் "காத்தவராயா! மதுரை வீரா!" என்றுகூட கேலியாக அழைப்பார்கள். இவன் எப்படி பார்வையிலும், நடைமுறையிலும் நெருப்போ, அதுபோலவே அந்த நெருப்பில் பட்டதும் 'குபீர்' எனப் பற்றிக் கொள்ளும் கற்பூரமாக இருந்தாள் அவன் தங்கை!...

கற்பூரம்

● உணர்ச்சி வசப்படும் காட்சியைக் கண்டாலோ—அல்லது அப்படியொரு செய்தியைக் கேட்டாலோ போதும்; கற்பூரத்திற்கு சாமி ஆவேசம் வந்து விடும். பிறகு உடுக்கு பம்பை எல்லாம் எடுத்து வர வேண்டியதுதான்! அரைமணி நேரமாவது ஆடி ஓய்வாள்; அதற்குள் அவசர அவசரமாக அபிலாஷைக்காரர்கள் குறி கேட்க ஓடி வருவார்கள். அவளும் ஆடிக்கொண்டே குறி சொல்லுவாள். கற்பூரத்தின் மகிமை அந்த வட்டாரத்திலேயே பரவி இருந்தது. வயது பதினெட்டுக்குள்ளே தானிருக்கும்—பேரழகு எனக்கூற முடியாவிட்டாலும் கவர்ச்சிக்குக் குறைவின்றிக் காணப்படுவாள். கண்களிலே அவளுக்கு ஒரு மயக்கும் சக்தியுண்டு. அவள் [illegible]

முகத்திலே நிரந்தரமாக அமைந்த ஒரு கருமையான மரு அவளுக்குத் தனிக் கவர்ச்சியைத்தான் தந்தது. எரிந்து விழும் அண்ணனைப் போலவே அவளும் "வெடுக், வெடுக்" என்று பேசுவாள். ஆனால் தேவதையின் அவதாரம் என்று கருதிக் கொண்டு அனைவரும் பக்தி செலுத்தினார்களே தவிர, அவள் நல்லவளா கெட்டவளா என்று ஆராய்வதற்கு யாருமே முன் வரவில்லை. தேவ அம்சத்தைப்பற்றி ஆராய்வது பாவமல்லவா? அதனால் போலும் தேவ அம்சம்—தெய்வீகப் போர்வை—அவைகளிலேயிருந்து சமுதாயத்தை விடுவிக்க வேண்டுமென்ற நினைப்புடைய இளைஞன் ஒருவன் அந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்த பிறகு ஊரிலே புரட்சி ஆரம்பமாகி விட்டது என்று கூறலாம்....

ஆசிரியர் அறவாழி

● புரட்சி ஏற்படுத்தக் கூடிய தோற்றமோ, முக அமைப்போ சிறிதுமில்லைதான் அவனிடம்! புரட்சிக்காரன் என்றால் தீச்சட்டி சிங்காரத்தைப் போலவா இருக்க வேண்டும்? அமைதி நிறைந்த வதனமும், அதைவிட மென்மையான சொல்லுங் கொண்டு உலகத்திலே பெரும் புரட்சியை மூட்டி விடவில்லையா கௌதம புத்தர்! காட்டாற்றிலே வெள்ளம் கரை புரண்டு வருகிற தென்றால்...... அதற்காக நடைபெறும் ஆரம்பப் புரட்சி எவ்வளவு அமைதியாக யாருக்கும் தெரியாமல் நடந்து விடுகிறது! கடல் நீரைக் கதிரவன் நீராவியாக்குவதும், நீர் மேகங்களில் குளிர் காற்று மோதுவதும் எவ்வளவு அமைதியாக நடைபெறுகிற புரட்சிகள்! மழை பொழிந்து, உலகம் வெள்ளக்காடாகும் வரையில், கடல், கதிர், காற்று இவைகள் நடத்திய அமைதியான புரட்சிக் கட்டத்தை யாருமே கவனிப்பதில்லையே!

அந்த அமைதியான புரட்சியின் விளைவு உலகைப் பெரிதும் வாழ்விப்பதாகவும், சிறிதளவு அழிப்பதாகவுமே முடிகிறது; அது தவிர்க்க முடியாதது! அது போலவே மிருதுவான உள்ளத்திலேயிருந்து புரட்சிக் கனல் புறப்படுகிறது. அப்படியொரு உள்ளந்தான் சிற்றூரில் முதன் முதலாக அடியெடுத்து வைத்தது. ஆசிரியர் அறவாழியை அந்த ஊர் மக்கள் சற்று ஆச்சரியத்துடன் வரவேற்றார்கள். ஏனெனில் இது வரை அவர்கள் ஒரு இளைஞரை ஆசிரியராகக் கண்டதில்லை. தலை நரைத்த, கொட்டை தட்டிய கிழடுகளையே கண்டு கண்டு, ஆசிரியர் இப்படித்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்திருந்தவர்கள் அந்த ஊரார். அவர்கள் அறவாழியை வியப்போடு நோக்கினர். அறவாழி ஊருக்கு வந்த அன்றைக்கே சிறு சச்சரவு — அதற்குக் காரணகர்த்தா, கரகமாடி கண்ணன்.

கரகமாடி கண்ணன்

● அழகானவன்—அரும்பு மீசையும் அரிமா நோக்கும் கொண்ட வாலிபன்—ஆழ்ந்த பக்திமான்—பூக்கரகம் எடுத்து ஆடுவதில் அவனுக்கு நிகரான திறமைசாலி யாருமே இல்லையெனப் புகழ் பெற்றவன். பரம்பரை வழக்கம்—பழமை—இவைகளில் அசைக்க முடியாத பற்றுதல் கொண்டவன். எடுப்பார் கைப்பிள்ளை! யார் எதைச் சொன்னாலும் அந்தக் கேட்டு நடக்கக் கூடிய சுபாவம். அவனுக்கும் தீச்சட்டி சிங்காரத்துக்கும் அந்த ஊரிலே பரம்பரைப் பகை! அவர்கள் பாட்டன் பூட்டன் காலத்திலேயிருந்து இரண்டு குடும்பங்களுமே தீச்சட்டி ஆட்டம், கரக ஆட்டம் இவைகளிலே போட்டிபோட்டு சண்[illegible]டுக் கொண்டுவிலகி வாழ்[illegible] எல்லாச் சண்டைகளையும் [illegible]ர்த்து வைக்கும் பஞ்சாயத்தார் பரமசிவம் இவர்கள் சண்டையைத் தீர்க்க முடியாமல் திணறுகிறார்...

பஞ்சாயத்தார் பரமசிவம்

● வெகுளி! வெளுத்ததெல்லாம் பால் அவருக்கு! ஊரிலே அவர் வீடு பரம்பரைப் பணக்காரவீடு. சுத்தக் கருமி-சுருட்டு ஒன்றை அணைத்து அணைத்து மூன்று நாளைக்குப் புகைப்பார். ஏழை விவசாயிபோலத் தோற்றமளிக்கும் அவருக்கு எழுபது ஏக்கராவுக்கு மேல் நிலபுலம், தோட்டம் துரவுகள் உண்டு.

"எல்லாம் ஆண்டவன் தந்தது" என்ற வாசகத்தை ஒரு நாளைக்கு ஆயிரம் தட்வையாவது உச்சரிக்கும் அவருக்கு ஒரு பைத்தியத்தை மகனாகத் தந்து விட்டார் ஆண்டவன். பைத்தியக்கார மகனைப்பற்றி விளக்கம் எதற்காக உங்களுக்கு! கதையில் பல இடங்களில் வரப் போகிறான்—அப்போது சுவைக்கலாம் அவனது செய்கைகளையும் பேச்சுகளையும்!

ஓரளவுக்கு அறிமுகம் முடிந்து விட்டது. இடையிடையே பலர் வருவர்; போவர்—இனிக் கதையைத் தொடர அனுமதிப்பீர்கள் அல்லவா?

தொடரும்

நீல விழிகள்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மறுத்த போதிலும், அவ்வரைக் காணாத நேரத்தில், என் உள்ளம் எரிமலைப் புழுவாய்த் துடித்தது!

"இந்த நிலையில் உனக்கும் ஹென்றிக்கும் திருமணம் என்று அவரே என்னிடம் கூறிய போது, என் உணர்ச்சி வேதனையை வெளிப்படுத்தவும் முடியாமல், பொறுக்கவும் இயலாமல் தவித்தேன்! — மெல்ல அவலம் தலைத் தூக்கியது என் உள்ளத்தில்! இதயக் கூட்டிலிருந்த பாச நேசப் பறவை எங்கோ பறந்து கொண்டிருந்தது! உள்ளத்தில் வீசிய பொறுமைப் புயலுக்குப் பதில் சொல்ல வேண்டியவளானேன்! அதன் விளைவு...

"நினைத்தாலும் நெஞ்சு நடுங்கும்! ஹென்றியின் மரணத்தை நீ எதிர்பார்த்திருக்கமாட்டாய்; ஆனால் நான் எதிர்பார்த்தேன் என்றால் நீ நம்பமாட்டாய்! அவருக்கு எப்படித் தெரியும்? ஆம்; நான் கொடுத்த ரொட்டித் துண்டுகள். நாய் கொல்லி நஞ்சு கலந்தவை என்று அவருக்குத் தெரியாது!"

சூசெனுக்கு மூச்சே நின்று விடும்போல் இருந்தது. அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. அதைத்தான் மார்கரெட்டும் விரும்பினாள்!

"வேலைக்காரி செய்தி கொண்டு வருவதற்கு முன்பே, ஹென்றியின் முடிவை நான் கணித்துவிட்டேன்! எப்படியோ அன்று மட்டும் அமைதியாக இருந்துவிட்டேன்! அதற்குப் பின் அந்த அமைதி இறந்துவிட்டது! என்னை — ஏன்; அன்றே இறந்திருப்பேன். ஆனால் ஹென்றிக்கு நேர்ந்தது இயற்கை மரணம் என்று உலகம் நினைத்தாலும், அவர் மரணத்துக்குப் பின்னணியாக இருந்த உண்மையை உனக்குச் சொல்லிவிட்டுப் போகத்தான் இன்றுவரை உயிருடன் உலவினேன்! இனி என் அமைதி, உன் தூய உள்ளத்திலிருந்து பிறக்கும் மன்னிப்பில்தான் இருக்கிறது! ஊசலாடிக்கொண்டிருக்கும் உயிருக்கு, ஆண்டவன் மன்னிப்பால் அமைதி பிறக்காது"—சூசென் ஊமையாகிவிட்டாள்! மார்கரெட்டின் நிலை கவலைக்கிடமாகிவிட்டதை உணர்ந்து கொண்டாள் சூசென்! அவள் உதடுகள் இறுதியாக ஒருமுறை மார்கரெட்டின் நெற்றியில் குவிந்தன!

"உடன் பிறந்தவளுக்கு இழைத்த துரோகத்தைக் காட்டிலும் அவளுக்காக நீ செய்த நாற்பதாண்டுத் தியாகம் மிகப் பெரிது, மார்கரெட்! என் மாணிக்கமே! தூய்மை நிறைந்த உள்ளத்தோடு உன்னை மன்னித்துவிட்டேன்! மன்னித்துவிட்டேன்!"

மார்கரெட்டின் உதடுகள் புன்னகையை நெளிய விட்டன!

இறுதிவரை அந்த நீல விழிகள் ஒளி வீசிக் கொண்டுதான் இருந்தன! ஃ

நாஞ்சில் மாவட்ட

தி. மு. க. மாநாடு

நாகர்கோயில் (கிருஷ்ணன் கோவில்)

கலைவாணர் பந்தலில்

டிசம்பர் 27-28 (வெள்ளி, சனி)

ஆகிய நாட்களில் நடைபெறும்.

தலைவர் :

ஈ. வி. கே. சம்பத் எம். பி.

திறப்பாளர் :

டாக்டர். எஸ். அருணசலம்

அறிஞர் அண்ணு,

நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்வார்கள்.

இரு நாட்களிலும் கலைநிகழ்ச்சிகள் உண்டு.

—கலைக்குமார், விளம்பரக் குழு | —கி. மனோகரன், வரவேற்புக் குழுத் தலைவர்

திரண்டு வாரீர்!

இந்தியாவின்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தூதை இதுவரையில் நீங்கள் கண்டிருக்க முடியாது! கேட்டிருக்க முடியாது! இனிக் காணவும் கேட்கவும் முடியாது!

கிழவி போன்ற கிருஷ்ண மேனன், இருவர்கள் இருபுறம் தாங்க இரத்தக் கொதிப்பால் அவதிப்பட்டுக் கொண்டே அகில உலகப் பிரதிநிதிகளிடையே வாய்க்கு வந்தவாறு பேசி, பிறகு மன்னிப்பு பெற்ற கதையும்-கம்யூனிசத்தைப் பற்றிக் கண்டபடி பேசிவிட்டு, 'நேரு சாச்சா' பக்கவாத்தியம் முழங்க, காங்கிரஸ் மந்திரிகள், "ஐயோ பாவம்! அவரை விட்டு விடுங்கள்!" எனக்கெஞ்ச, டி.டி.கே. தப்பிய கதையும் யாரால் தான் மறக்க இயலும்?

'இணையற்ற இராம தூதர்கள்! இழிவு தேடும் இராம தூதர்கள்!' எனக்கூறி, அடுத்து "குறள் மணி" பேச இருப்பதால் இத்துடன் என் உரையை முடிக்கிறேன்.

●

குறள்மணி : வள்ளுவனார் தூதின் இலக்கணம் குறித்து பத்துப் பாடல்களிலே அழகாக எழுதியுள்ளார். "அன்பும் அறிவும், எதனையும் ஆராய்ந்து பேசும் ஆற்றலும் தூதருக்கு இன்றியமையாத பண்புகள்! இயற்கை அறிவும், கவர்ச்சிகரமான வடிவும், ஆராய்ச்சி அறிவும் கொண்டவராக இருத்தல் வேண்டும். எதனையும் மற்றவர்களிடம் சொல்லுங்கால் தொகுத்துச் சொல்லியும், கடுஞ் சொற்களை நீக்கியும் மகிழும்படி இனிமையாகப் பேசியும், தன் அரசருக்கு நன்மை தேடித் தர வேண்டும். கடமை அறிந்து, காலமும் இடமும் கருதிப் பார்த்து ஆய்ந்தாராய்ந்து உரைப்பவரே சிறந்த தூதுவராவர்!"—இங்ஙனம் தூதின் இலக்கணம் குறித்து குறள் கூறுகிறது. இதை வைத்துக் கொண்டு, இன்றைக்கு வெளிநாட்டிலே உள்ள இந்திய இராம தூதர்களை ஒப்பிட்டுப் பாருங்கள்! சானகியைக் காணச் சென்ற இராம தூதனைவிட இவர்கள் மோசமானவர்களாக உள்ளனர்! மேலும் வெளிநாட்டுத் தூதராலயத்தில் நடைபெறும் அக்ரமங்களைக் கூறுவதற்கு நா கூசுகிறது! ஒரு தூதர், தூதராலயத்திலிருந்த வெள்ளிப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு ஈயப் பாத்திரங்களை வைத்தாராம்! இதைப் போன்ற செய்திகளைக் கேள்விப்படும் வெளி நாட்டார் பாரத புத்திரர்கள் யாவரையுமல்லவா திருடர்களாகக் கருதுவார்கள்? திருடர்களையும், தன்னலப் பேய்களையுமா தூதர்களாக அனுப்புவது? நேருவுக்கு யாராவது கீழ்க் கண்ட வெண்பாக்களை மொழி பெயர்த்துக் கூறுவார்களா?

"அன்புடைமை ஆய்ந்த அறிவுடைமை இப்பிறப்பு
நன்குடைமை நல்ல நயனுடைமை—நன்கமைந்த
சுற்ற முடைமை வடிவுடைமை; சொல்வன்மை
கற்றடங்கல் தூதின் கடன்!"

தடுமாற்றம் இன்றித் தகைசான்ற சொல்லான்
விடுமாற்றம் வாய் சோராணுகி—விடுமாற்றம்
எஞ்சாது கூறி இகல் வேந்தன் சீறுங்கால்
அஞ்சாது அமைவது தூது!"

மணிக்கணக்காகப்பேசி மேனாட்டாரின் வெறுப்பைப் பெற்ற கிருஷ்ண மேனன், ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கப்பட்ட ஏதாவது ஒரு குறள் புத்தகத்தை எடுத்து,

"தொகச்சொல்லித் தூவாத நீக்கி [illegible] சொல்லி
நன்றி பயப்பதாம் தூது"

"கடன் அறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை"

"விடுமாற்றம் வேந்தருக்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்கணவன்!"

என்பன போன்ற குறட்பாக்களைப் படிப்பாரா? "காலம் அறிதல் கருதுங்கால் தூதுவர்க்கு ஞாலம் அறிந்த புகழ்" எனக் கூறப்படுவதை யாராவது அவருக்கு எடுத்துக் கூறுவார்களா? கிருஷ்ண மேனன் போன்ற தூதர்களைப் பார்த்துத்தான் "குற்றமான சொற்களை வாய் சோர்ந்தும் சொல்லாதே! அப்படிச் சொல்லுவாயானால் நீ நாட்டின் நலன் கருதும் தூதனல்ல!" என்று வள்ளுவர் கூறினார் போலும்!

எனவே எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இராம இராச்சியத்தின் தூதர்கள் தகுதியற்றவர்களாகவே காணப்படுகிறார்கள்! தகுதியுள்ள பலரை அவையின் கண்ணே வைத்துக் கொண்டு சிபாரிசினாலும், "வேண்டியவன்; வேண்டாதவன்! இவன் இந்தக் கட்சிக்குப் பரிந்து பேசுபவன்!" என்றெல்லாம் யோசித்து இத்தகைய தூதர்களை அனுப்புவதால் நாட்டின் நலம் நாசமாகிறது —எனக் கூறி என் உரையை முடிக்கிறேன்.

தலைவர்: இந்தப் பேச்சை யெல்லாம் கேட்டபொழுது எனக்கு ஒரு பெரிய சந்தேகம் எழுந்தது! "ஏன் தமிழரசியையும், முத்துவேலனையும், குறள் மணியையும் இந்தியத் தூதர்களாக வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடாது?" [illegible] சந்தேகம்தான்! (கைதட்டல்)

—"இன்பபுரியான்"

வடாற்காடு மாவட்ட தி. மு. க.

அன்புடையீர்!

வணக்கம். வடாற்காடு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் நாளது 22—12—57 அன்று மாலை 2 மணிக்கு, திருவண்ணமலை, ராமநாதன் செட்டியார் ஹாலில் (காந்தி சிலைக் கருகில்) நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு வரும். அங்கத்தினர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்.

1. மாநாட்டு வரவு செலவு,
2. மத்திய கழகத்திற்கு நிதி ஒதுக்குதல்,
3. இதர தீர்மானங்கள்.

அன்பன்,
முல்லை சத்தி
(செயலாளர்)

பண்டிதர் 'அறிவிலி'யாம்; சுப்ரமணியனார் ஏசுகிறார்!

இப்போதெல்லாம் அமைச்சர்கள் அரசியல் விவகாரங்களில் மட்டும் அபிப்பிராயம் சொல்வதில்லை!

பெரிய மனிதர் என்று பெயர் வாங்கவேண்டுமானால் அவர்கள் யாராயிருந்தாலும் நெற்றியிலே பட்டை 'பட்டை'யாக விபூதி யணியவேண்டும்; நாலு பேர் கூடுகிற கூட்டத்திலெல்லாம் 'நாஸ்திகர்கள்' என்கிற பெயரிப் பகுத்தறிவுவாதிகள்மீது வசை புராணம் பாடவேண்டும்—இப்படி வளர்ந்திருக்கிறது, ஒரு சூழ்நிலை!

—இதற்கு எந்த விதத்திலும் அப்பாற்பட்டவரல்ல, கனம் நிதியமைச்சர் சுப்ரமணியம்.

சமீபத்தில் அவர் ஒரு விழாவிலே கலந்துகொண்டார்.

அது விஞ்ஞானத்தின் மூலம் அஞ்ஞானத்தைப் பரப்புகின்ற விழா!

அதாவது திருவெம்பாவைப் பாடல்கள் சிலவற்றை தருமபுர ஆதீனத்தார் இசைத்தட்டுகளில் பதிவு செய்திருக்கிறார்களாம்!

அந்த இசைத்தட்டு வெளியீட்டு விழாவிலேதான் நமது அமைச்சரும் கலந்துகொண்டிருக்கிறார். அப்போதுதான் இறைவனைப் பற்றிய அரும்பெரும் தத்துவங்கள் சிலவற்றை அவிழ்த்து விட்டிருக்கிறார்:

"இந்தக் காலத்தில் சிலர் பகுத்தறிவின் பெயரால் சமயத்தையும் கடவுளையும் இகழ்கின்றனர். அவையெல்லாம் மூட நம்பிக்கை என்கின்றனர். தாங்கள் வளர்க்க முடியாத, தங்கள் அறி[illegible]பட்டாத விஷயங்களை பொய் என, அவர்கள் நினைக்கத் தலைப்படுகின்றனர். விஞ்ஞான முன்னேற்றத்தை அவர்கள் சுட்டிக் காட்டி, விஞ்ஞானம் வளர வளர கடவுள் இருக்கிறார் என்ற தப்பெண்ணங்கள் எல்லாம் மறைந்துவிடும் என கூறுகின்றனர்......

எனவே உண்மையான இன்பத்துக்கு வழியை நம் சமயப் பெரியார்கள் காட்டிச் சென்றுள்ளனர் என்பதில் ஐயமில்லை. அதுதான் சரியான வழி. அந்நெறியில் நாம் செல்வோமேயானால் உண்மையான— முழுமையான நல்வாழ்வு வாழ்வோம். அதுதான் அன்பு வழி; ஆன்ம நெறி; அறிவீனரும் மடையருமே அதனைப் புறக்கணிப்பார்கள்."

—ஆக; மொத்தத்தில் அமைச்சர் சுப்ரமணியனார் தனது பேச்சின்மூலம் யாரார் அறிவீனர், மடையர் என்பதற்கு இலக்கணம் வகுத்திருக்கிறார்.

அதாவது சமயத்தையும் கடவுளையும் மூடநம்பிக்கை என்று இகழ்பவர்களும்; சமயப் பெரியார்கள் காட்டிச் சென்ற வழியில் செல்லாதவர்களும் அறிவீனரும் மடையருமாவர்—என்பது சுப்ரமணியனாரது பொன்மொழி.

அந்தப் பொன்மொழியின்படி எப்படிப்பட்டவர்கள் எல்லாம் அந்த 'அறிவீனர்: மடையர்'— என்கிற பட்டப் பெயருக்கு உரியவர்களாகி விடுகிறார்கள் என்று ஆராய்ந்து பார்ப்போம்.

சுப்ரமணியனார் சென்னையில் உபன்யாசம் செய்த அதே நாள்—அதாவது டிசம்பர் 17-ம் தேதியன்று—ஒரிஸ்ஸாவிலே ரூர்கலா என்னுமிடத்திலே பண்டித நேரு சில உண்மைகளைக் கூறியிருக்கிறார்.

பண்டித நேரு எப்போதுமே தன்னை ஒரு 'பகுத்தறிவு வாதி' என்று கூறிக் கொள்கிறார்.

ஒரு வழக்கு மன்றத்திலகூட அவர் 'சத்தியம்' என்கிற வார்த்தையை உச்சரிக்க மறுத்திருக்கிறார்.

சமீபத்திலகூட ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது, பசு வழிபாட்டைக் கண்டித்திருக்கிறார்: 'என்னைப் பொருத்தவரையில் பசுவுக்கும் குதிரைக்கும் அதிக வித்தியாசமில்லை" என்று இந்து சனாதனவாதிகளின் மண்டையில் அடிப்பதுபோல் முழங்கியிருக்கிறார்.

அன்னார் ரூர்கலாவிலே பேசியது என்ன?

"மனிதர்கள் அனைவரும் உழைத்து முன்னுக்கு வரவேண்டுமே தவிர, எல்லா[illegible] னை நம்பிக்[illegible]ரு[illegible] கூடாது."

—இந்தப்பேச்சுக்கு ஒரு தமிழ்ப் பத்திரிகை 'கடவுளை நம்பாதே!' என்ற உபதலைப்பு கொடுத்திருக்கிறது.

பண்டிதர் மேலும் பேசியிருக்கிறார்., அந்தச் செய்தி 'தினமணி'யில் 'யாகம் வேண்டாம்' என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு வந்திருக்கிறது:

"பிரதம மந்திரி நேரு இன்று 'யக்ஞம்' (யாகம்) செய்வதைக் கண்டித்தார். இதைச் செய்வதால் அரிசி, நெய் போன்ற உயர்ந்த உணவுப் பொருள்கள் அக்னியில் இடப்பட்டு விடுகின்றன-என்றார்.

"இங்கு பிருமாண்டமானதொரு பொதுக்கூட்டத்தில் மேற்கொண்டு பேசுகையில், யாகங்கள் மூலம் மழைக்கு அதிபதியான வருணனைத் திருப்தி செய்வதானது மேலும் உணவுப் பொருள்களுக்கு நஷ்டத்தைத்தான் உண்டு பண்ணும் என்று கூறி, மக்கள் தங்கள் சரீர உழைப்பையே அதிகம் சார்ந்திருக்க வேண்டுமென்று மக்களைக் கேட்டுக் கொண்டார்."

'கடவுளை நம்பாதே'— 'யாகம் வேண்டாம்'— இப்படிக் கூக்குரல் போடுபவர் யார்?

பண்டித நேரு!

மூடநம்பிக்கை என்ற பெயரில் பசு [illegible]பாட்டைக் கண்டித்தவர் யார்?

பண்டித நேரு!

"வருணனைத் திருப்தி செய்வதற்காக 'உணவுப் பொருள்களை வீணாக்காதீர்கள்!"—என்று உபதேசம் செய்தவர் யார்?

பண்டித நேரு!

"உன் சொந்த முயற்சியில் நம்பிக்கை வை; கடவுளை நம்பிக் கொண்டு இருக்காதே"— என்று

[தொடர்ச்சி பக்கம்—10]

நீள்கிறது, நீதியற்ற சட்டம்!



[illegible]ப்புக்காவல் சட்டம் எப்படி எதிர்ப்பு இருந்தும் எவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக நீட்டப்[illegible]ருக்கிறது என்பதைத்[illegible]

ஒ...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

அறிவுரை கூறிய பகுத்தறிவுவாதி யார்?

பண்டித நேரு!

ஆனால் கனம் நிதியமைச்சர் சுப்ரமணியனார் —யாரை 'அறிவீனர்' 'மடையர்' என்று அழைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்?

— சமயத்தையும் கடவுளையும் நம்பிக்கை என்று இல்லாதவர்களை!

நம்பப் பெரியவர்கள் காட்டிச் சென்ற வழியில் செல்லாதவர்களை

—அப்படியானால் கனம் சுப்பிரமணியனாரின் இந்தக் கருத்தின்படி 'கடவுளை நம்பாதே!'; 'யாகம் வேண்டாம்'; 'பசு வழிபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை'— என்று கூறுகிற பண்டித நேரு எப்படிப் பட்டவராக இருக்க வேண்டும்?

............!

—எழுதவே கை நடுங்குகிறது! அவர்களின் அகராதியின்படியே இந்தியாவின் பிரதமரான ஆசியாவின் ஜோதி பாருக்கெல்லாம் பஞ்சசீலம் தந்த பரஞ்சோதியை கனம் சுப்ரமணியனார் இப்படியா கீழ்த்தரமான வார்த்தைகளால் தாக்குவது?

பெரியாரை பண்டித நேரு 'காட்டுமிராண்டி' என்று திட்டுவதைப் பார்த்துப் பரவசப்பட்ட தேசியத் தோழர்களே! இப்போது உங்கள் நிதியமைச்சர் சுப்ரமணியம் பண்டித நேருவை 'அறிவீனர்' 'மடையர்'—என்று திட்டுவதைப் பார்த்துக் கொண்டு கண்டிக்காமல் சும்மாவா இருக்கிறீர்கள்?

வெட்கம்...வெட்கம்...வெட்கம்!

அமைச்சர் சு[illegible]மணியனார் அன்று தனது சொந்த அனுபவத்தையும் கூடக் கூறியிருக்கிறார்:

"நடுங்கும் மார்கழிக் குளிரில், பொழுது புலருமுன் நீராடி, இறைவனை வழிபடும் பக்திப் பாடல்களைப் பாடி, நகர் வலம் வரும் பஜனை கோஷ்டிகளில் கலந்து கொள்வதென்பது தனிச் சிறப்பு வாய்ந்தது; அந்தப் பேரின்பத்துக்கு ஈடு கிடையாது. பனி பெய்யும் மார்கழிக் காலையில் முந்தநாள் கடற்கரையில் உலாவச் சென்றேன். சிறிது [illegible] உலாவிவிட்டு திருவல்லிக்கேணி கோயிலுக்குள் நுழைந்தேன். திருப்பாவை—திருவெம்பாவை கூட்டுப் பாராயணம் முழங்கிக்கொண்டிருந்தது"

—அதற்குப் பிறகு திருவல்லிக்கேணி கோயிலில் நடந்தது என்ன தெரியுமா?

"என் உடலுக்கும், உள்ளத்துக்கும், கண்ணுக்கும், கருத்துக்கும் இறைவனின் காட்சியும் இசையின் மாட்சியும் பேரின்பமாக இருந்தன."

—மார்கழிக் காலையில் திருவல்லிக்கேணி கோயிலில் நுழைவதுக்கும், உள்ளத்திற்கும், கண்ணுக்குக் கூடப் [illegible]மாக இருந்ததாம் அமைச்[illegible]

எல்லோ[illegible]

பம்' கிடை[illegible]க்கும் அந்தப் 'பேரின்' கள் அனைவருக்[illegible]தமோ—என்று நீங் [illegible]வல்லிக்கேணி [illegible]திகாலையில் திரு[illegible] [illegible]யிலுக்குள் நுழைந்து விடாதீர்கள்!

அவர் அமைச்சர்; கனம்; [illegible] ருக்குக் கிடைக்கும்!

மற்ற சாமான்யர்களுக்கு[illegible]ம் கிடைக்குமா?



சாந்தி

ஆசிரியர்: செ. பிரியாத்துரை

போர் வெறியன் ஒருவனின் கொடுமை நிரம்பிய வாழ்வும், பரிதாபகரமான முடிவும் விளங்குமாறு சுருக்கமாகத் தீட்டப்பட்ட இச்சிறு நாடக நூலில், மாணவர்கள் நடிப்பதற்கு இயையும் வண்ணம் உரையாடல்கள் புனையப்பட்டுள்ளன.

விலை: 61 காசு

கிடைக்குமிடம்:

20, காமராஜ் சாலை, சென்னை-21

வரலாற்றில் தமிழகம்

ஆசிரியர்: கா. ப. சாமி, கோலாலம்பூர்

வரலாற்று ஆராய்ச்சியாளர்களும், பிற தமிழறிஞர்களும் ஆய்ந்து கண்ட முடிவுகளையும், இலக்கிய மேற்கோள்களையும் உறுதுணையாகக் கொண்டு, பண்டைத் தமிழக மேம்பாட்டினையும், அது இந்நாள் தாழ்வுற்ற நிலையினையும், அதற்கான காரணங்களையும் சரியாக விளக்கியுள்ள இவ்வாசிரியர், எதிர் காலத்தில் தமிழகம் அறிஞர் அண்ணாவின் தலைமையில்தான் மீண்டும் ஏற்றம் பெறும் என நாட்டியுள்ளார். கவர்ச்சி மிக்க முகப்போடு கூடிய இவ்வேடு தாயகத் தமிழரால் பெரிதும் வரவேற்பதற்குரியதாகும்.

விலை: 1 ஷில்லிங்

கிடைக்குமிடம்:

குறள் மன்றம்,
38, கேம்பல் ரோடு, கோலாலம்பூர்

நட்பின் பெருமை

ஆசிரியர்: ஏ. கலைக்குகன்

ஏழைகளிடம் அன்பு பூண்டு, அவர்களுக்கு உதவுவதே இலட்சியமாகக் கொண்டு, அதனால் இன்னல்களை அனுபவித்த இளைஞனொருவனைப் பற்றி எளிய நடையில் நாடக பாணியில் இந்த நூல் இயற்றப்பட்டுள்ளது. இடையே குறட்பாக்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. சிறிய அளவில் மாணவர் தரத்தில் தயாரிக்கப்பட்டிருப்பதால்தானோ என்னவோ இந் நாடகத்தில் கதையம்சமும், விறுவிறுப்பும் குறைவாயிருக்கின்றன.

விலை: 6 அணா

கிடைக்குமிடம்:

குகன் பதிப்பகம், தளவாய்புரம்

திராவிட ஆட்சி முறை

ஆசிரியர்: இராசை. கி. அரங்கசாமி

திருக்குறளில் திளைக்கும் பேற்றினைப் பேரின்பமாகக் கருதும் இந்நூலாசிரியர், குறளைப் போலவே, இதனையும் மூன்றாகப் பகுத்து வாழ்க்கை மன்றம், ஆட்சி மன்றம், ஆய்வு மன்றம் என்று ஒவ்வொன்றிலும் 111 வெண்பாக்களாக நூலை ஆக்கியுள்ளார். நமக்கும், நம்மைப்பற்றி அறிய அவாவுறும் பிறர்க்கும் பயன்படும் வண்ணம் என்றும் உள்ளத்தில நிலைத்திருக்கச் செய்யுள் வடிவினைக் கையாண்டுள்ளார், ஆசிரியர். அரிதின் முயன்று, பலநூல பயின்று, திராவிடர் இயக்கக் கொள்கைகளைத் தெளிவாக உணர்ந்து, தம் தமிழ்ப் புலமையின் வலிவால், பொலிவுமிகும் இவ்வுயரிய நூலை இயற்றியதன் வாயிலாகத் திராவிடத்தாரால் ஒருமுகமாகப் பாராட்டப்படுவார் என்பதில் ஐயமில்லை. அனைவருடைய கையிலும், திருக்குறளுக் கடுத்துத் திகழ வேண்டிய ஒரு ஏடாகும் இது!

விலை: ரூ. 1.

கிடைக்குமிடம்:

திருக்குறள் பதிப்பகம், இராசிபுரம்

பிறைவானம்...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

நல்ல[illegible] நாட்டு பாணி இது' என்[illegible] முணு முணுக்க [illegible] [illegible]தடர் [illegible]த்திருக்கும் 'பாசத்தை' எண்ணி பெருமிதம் [illegible]ண்டேன்.

"கீழ வீதியிலே நீங்கள் போகும் வீட்டு எண் சொல்லலாமோ?" என்றான் அவன்.

"இருபத்து ஒன்று!" என்றேன் நான்!

"அடப்பாவி! நானும் உன் பக்கத்து வீட்டுக்குத்தானே வருகிறேன்! இருபது, நான் போகும் வீட்டின் எண்! அப்பா நம்ம இரண்டு பேரும் சேர்ந்தே திரும்பிடலாம் என்று சொல்லும்...சபாஷ்!..." என்று சொல்லிக் கொண்டே என் முதுகில் ஒரு தட்டு தட்டி, மறுபடியும் கையைப் பிடித்துக் குலுக்கினார்,

நான், மகிழ்ச்சியால் பூரித்துப் போனேன். ஊரெல்லாம் போற்றும் ஒரு 'சோதிட மேதை' யுடன் சரிசமமாக உட்கார்ந்து, சேர்ந்து பயணம் செய்வதும், சேர்ந்து திரும்புவதும் பெருமைக்குரிய பெரும் பேறு என்று நான் நம்பினேன்.

ஏதோ ஒரு சிறிய 'ரயில்வே ஸ்டேஷனி'ல் ரயில் நின்றது. உடனே சோதிடன் அவசர அவசரமாக எழுந்திருந்தான். "ஆறு முகம்! ஒரு 'செகண்ட்' இரு—வெற்றிலை சீவல் வாங்கிக் கொண்டு ஓடிவந்து விடுகிறேன்—இங்கேதான் அசல் கும்பகோணம் வெற்றிலை கிடைக்கும்!" என்று சொல்லிவிட்டு ரயிலை விட்டு இறங்கினான்.

நான் காத்திருந்தேன். அவன் திரும்பவேயில்லை. ரயில் ஊதி விட்டது. எனக்கு என்னவோ போல இருந்தது. 'அடப்பாவமே! ரயிலைத் தவற விட்டு தொல்லைப்படப் போகிறாரே' என்று வருந்தினேன்.

நானும் இறங்கி விடுவோமா என்று முயற்சித்தேன். ஆனால் அதற்குள் ரயில் நகரத் தொடங்கி விட்டது. நான் என்ன செய்ய முடியும்? அடுத்த ரயிலில் வருவான், மாயவரத்தில் சந்திக்கலாம் என்று எண்ணி பொங்கி வந்த சோகத்தை அடக்கிக் கொண்டேன்.

ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் அந்த சோதிடன் இனி திரும்பவேமாட்டான் என்ற உண்மையை நான் உணர்ந்து கொண்டதும் என் உள்ளம் கோபத்தால் குமுறியது! அந்தக் குடிகேடியை விட்டு விட்டோமே என்று கொந்தளித்தது!

அவன் சென்ற [illegible]ல்லரைத்திற்குப் பிறகு அடிக்கடி அவன் கைகுலுக்கியதால் வலித்த கையைப் பிடித்து விடுவதற்காகக் கையைப் பார்த்தேன். மறுகணம் பாம்பை மிதித்தவன் போல் துள்ளிக் குதித்தேன்! ஏன்?

என் கையிலே—பரம்பரை பரம்பரையாக அலங்கரித்து வந்த—பல நூறு ரூபாய் பெறுமானமுள்ள—வைரக்கல் மோதிரம்...இல்லை!

எங்கே போயிற்று?

இதற்குமா சோதிடம் கேட்க வேண்டும்?

மகிழ்ச்சி பொங்க என்னைப் பல முறை கை குலுக்கினானே அந்தப் படுபாவி— அதன் ரகசியத்தை நான் புரிந்து கொண்டு விட்டேன்!

என்ன செய்வது? என் அறியாமைக்கு விலையாக அந்த மோதிரத்தை இழந்துவிட்டு சோர்ந்த முகத்தோடு திரும்பினேன். இனி அந்தச் சோதிடன் இங்கு வர மாட்டான். கூடிக் குலவி கொள்ளையடிக்க அவன் வேறு இடம் தேடிப் போயிருப்பான்; அவனைக் கும்பிட்டு [illegible]ர வேற்க நம் நாட்டிலா குள்[illegible] புத்திக்காரர்களுக்குப் பஞ்சம்?

அப்பா கதையை முடித்தார். கண்ணனுக்கு அப்பாவின் மோதிரம் பறிபோனதே என்ற ஏக்கத்தைவிட சோதிடம் கேட்கச் சென்றோமே என்ற வெட்கம்தான் ஏற்பட்டது.

வீடு திரும்பினான்—விழிப்போடு படித்தான்—அந்த வருடம் அவன் பள்ளித் தேர்வில் வெற்றி பெற்றே தீருவான்! என்று ஆருடம் கணிக்க எந்தச் சோம்பேறி சோதிடனும் வர வேண்டாம்; அதை அவனே [illegible]யமாகக் கூறுகிறான்.

—செ[illegible]

பிறைவானம்

(பிள்ளைகள் பகுதி)

★

★ நம்பாதே; நம்பாதே! ★



கண்ணன் பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்தான்.

அவன் எங்கே போகிறான்?

அவனது கால்கள் மட்டும் தோட்டத்திலே வேக வேகமாக நடந்து கொண்டிருக்கவில்லை—அவனது உள்ளமும் அதைவிட வேகமாக யோசனை உலகத்திலே ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் அவனது பயந்த முகமோ அவன் ஏதோ தகாத செயல் ஒன்றைச் செய்ய இருக்கிறான் என்பதை 'பளிச்' சென்று எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

"டேய், கண்ணா!"

'சட்'டென்று திரும்பிப் பார்த்தான் அவன். தன்னை யாரோ அழைப்பதாக அவன் உணர்ந்தான். ஆனால் பின்னால் யாரையுமே காணோம். காற்றிலே அசைந்தாடிய மரங்கள் தான் 'சோ' என்ற ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தன.

அதுதான் 'போ' என்று அவனை விரட்டிக் கொண்டிருக்கிறதா? சருகுகளில் தன் பாதங்கள் படுவதால் எழும் சிறு சப்தத்தைக்கூட அவன் விரும்பவில்லை. பூனைபோல் மெதுவாக அடிவைத்து நடந்தான்.

"உன் ... த தாண்டா கண்ணா!"

கண்ணன் உண்மையில் அச்சத்தால் அதிர்ந்து விட்டான். எங்கிருந்து எழும்புகிறது அந்தக் குரல்?

'அசரீரி'யா?

அல்லது மனப் பிரமையா?

அல்லது அவன் செய்யப் போவது யாருக்காவது தெரிந்து விட்டதா?

'யாருக்குமே தெரியாது' என்ற அசட்டுத் தைரியத்தில் பலர் எவ்வளவோ காரியங்களைச் செய்து விடுவதில்லையா? அந்த இடுக்கிலேயிருந்தவது அந்தக் கழுகுக் கண்களவது கவனித்துக் கொண்டேயிருக்கும் என்பதை உணராத அந்த அப்பாவிகளில் ஒருவனாகத் தான் மாறிவிட்டிருந்தான் கண்ணன், அப்போது!

திரும்பாமல் மேலும் நடக்க அவனுக்குத் துணிவில்லை. திரும்பவும் தைரியமில்லை. என்ன செய்வது? மீண்டும் அந்தக் குரல் தன்னை அழைப்பதற்குள் தான் போக வேண்டிய இடத்திற்கு ஓடிவிட்டால் ... ஆமாம்; கோழைகூட ... நேரத்தில் தப்பிக் கொள்ளப் பயன்படுத்தும் ஓட்டம் ஆயுதம் அந்த ... தானே!

கண்ணன் ஓட ஆரம்பித்தான். தான் செல்ல வேண்டிய இடம் நோக்கி ஓடினான்; தலை தெறிக்க பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடிக் கொண்டிருந்தான்.

இன்னும் கொஞ்ச தூரம் ...அதோ, நெருங்கிவிட்டான். ... வேண்டிய இடம்! ... காடியிலே இருக்கும் குடிசை கண்களுக்குத் தெரிந்துவிட்டது! அங்கே இருப்பார் அந்த முக்காலும் ...ர்த்தும் ஞானி...அவரிடம் ...று விட்டால்...அப்புறம் யார் பின்புறம் வருகிறார்களோ என்ற அந்தக் கவலையெல்லாம் ஏன் ஏற்படப் போகிறது? கண்ணனின் உள்ளம் இப்படி ஓடிக் கொண்டிருந்தது.

அதோ, அந்தக் குடிசை! அவன் மனதிலே நின்று—நிலைத்து 'வருக, வருக!' என்று வரவேற்றுக் கொண்டிருந்த அந்தக் குடிசை!

கண்ணன் ஓடிவந்த வேகத்தில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க—நெஞ்சு படபடக்க குடிசையின் வாசலை அடைந்தான். சட்டைப் பைக்குள் கையை விட்டு ஒருமுறை தடவிப் பார்த்துக் கொண்டான். அங்கே ஒரு எட்டணா நாணயம் 'இருக்கிறேன்; இருக்கிறேன்!' என்று துள்ளிக் கொண்டு கிடந்தது.

கண்ணன் குடிசை வாசலில் நின்று "ஐயா, சுவாமிகளே!" என்று அழைத்தான். பதிலில்லை. மறுபடியும் அழைத்தான். 'ஏன்' என்று கேட்பார் யாருமே இல்லை. கண்ணன் வேகமாக உள்ளே நுழைந்தான்.

ஆனால், என்ன ஆச்சரியம்!

அந்தக் குடிசை...காலியாகக் கிடந்தது. அவன் தேடி ஓடி வந்த உருவத்தை அங்கே காணோம்!

"சாமி..........."—கண்ணன் தொண்டை கிழியக் கத்தினான். பதிலில்லை.

கண்ணன் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தான். அப்போது அவன் கண்கள் குடிசை வாசலில் நிலைகுத்தி நின்று விட்டன.

அங்கே அவன் என்ன அதிசயத்தைக் கண்டு விட்டான்?

"எங்கேடா கண்ணா நான் கூப்பிட்டதைக்கூட காதில் வாங்காமல் இங்கே ஓடி வந்தாய்?"—என்று கேட்டுக் கொண்டே அங்கே நின்று கொண்டிருந்தார் தந்தை ஆறுமுகம்.

"நீங்கள்தானா அப்பா கூப்பிட்டது? நான் யாரோ பள்ளிக்கூடத்துத் தோழன் என்று பயந்துவிட்டேன்..."

"பயப்படும்படியாக நீ என்ன காரியம் செய்ய வந்தாய்?"

"பயம்கூட இல்லை அப்பா! வெட்கம்!...உன் திறமையிலே உனக்கே நம்பிக்கை இல்லையா—என்று கிண்டல் பேசிச் சிரிப்பார்களே என்ற வெட்கம்!..."

"என்ன?"

"ஆமாம், அப்பா! தேர்விலே வெற்றி பெறுவேனா ... டேனா — என்று சோதிடம் கேட்கத்தான் இந்தச் சோதிடரின் வீடு நோக்கி யாருக்கும் தெரியாமல் ஓடிவந்தேன்!...... இவர் சொன்னால் பலிக்குமாமே!..."

—இதைக் கேட்டதும் அப்பாவின் முகம் இரத்தச் சிவப்பாக மாறியது. அமைதி தவழும் அவரது முகத்திலே இந்த விபரீதக் கோபத்திற்கு என்ன வேலை?

"பலிக்கும்! உன்னையும் என்னையும் போன்ற பைத்தியக்காரர்கள் பல்லிளித்துக் கொண்டு அவன் எதிரிலே நின்றால் சோதிடம் பலிக்காது...... நாம்தான் ஏமாளிகளாக நேரும்!..."

அப்பாவா இப்படிப் பேசுகிறார்? ஆண்டவனின் சன்னிதானத்திலே — அர்ச்சகர்களின் முன்னாலே சிலையாக நின்று தோத்திரம் பாடும் அவரா இப்படிப் பேசுகிறார்? சோதிடர்கள் தான் இந்த உலகத்தின் கண் கண்ட கடவுள்கள்—அவர்கள் சொன்னால் மாறாது; கணித்தால் தவறாது என்று நம்பிக் கிடந்த அவருக்கு ஏன் இந்த வெறுப்பு?

ஊர்க்கோடி சோதிடரிடம் உயிரையே வைத்திருந்த அவர் இப்படிக் குமுறுவானேன்?

"என்னப்பா நடந்தது?..."

"அவன் நாசகாலன்—நான் நம்பி மோசம் போனவன்—இந்தக் கதையை விளக்கும் நயவஞ்சக நாடகம்தான் நடந்தது!..."

—ஆத்திரம் அவர் தொண்டையை அடைத்தது. அழுகை கூட வந்து விடும்போல் இருந்தது. ஏமாறிய நெஞ்சமல்லவா!

அவர் சொன்னார்:

உனக்குத்தான் தெரியுமே கண்ணா, நான் பக்கத்து ஊருக்குச் செல்ல காலையிலேயே புறப்பட்டு விட்டேன் என்பது. நேராக நான் புகைவண்டி நிலையம் செல்லவில்லை. புறப்பட்ட நேரம் சரிதானா—போகிற காரியத்திலே லாபம் கிடைக்குமா—என்று கேட்பதற்காக இந்தப் பொல்லாத சோதிடனைத் தேடி வந்தேன். அவன் இல்லை. என்ன செய்வது என்ற குழப்பமுடன், —சோதிடம் பார்க்காது ...ப்படுவதே தவறில்லை ... கலக்கத்துடன் புகைவண்டி நிலையம் சென்றேன்.

ஆனால் என்ன ஆச்சரியம்! புகை வண்டி நிலையத்திலே ... பலகை ஒன்றில் அந்த சோதிடன் உட்கார்ந்திருந்தான். எச்சில் இலையைக் கண்ட பிச்சைக்காரன்போல் நான் அவனிடம் ஓடினேன். "உங்களைத் தேடித்தான் வந்தேன் சாமி" என்று ... எல்லாம் ... விட்டேன்.

பக்கத்திலே உட்காரச் சொன்னான். உட்கார்ந்தேன். "போகிற காரியம் பலிக்குமா" —என்று பல்லைக் காட்டிக் கேட்டேன்.

கையை நீட்டச் சொன்னான் நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ரேகைகளைத்தான் கவனிக்கிறான் என்று நினைத்தேன். ஆனால்...என் கையிலே அவன் எதைப் பார்த்துக் கொண்டிருந்தான் என்று இப்போது நினைத்தாலும் என் இரத்தம் கொதிக்கிறது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு அவன் சொன்னான், நான் செல்லும் காரியம் வழக்கத்திற்கு மாறாக இரட்டை லாபம் தரப் போகிறது — என்று.

நான் மகிழ்ந்தேன். ரயில் வந்தது. ரயிலில் ஏறினேன். என் பின்னாலேயே அவனும் ஏறினான்.

நான் உட்கார்ந்த இடத்திற்கு எதிரிலேயே அவனுக்கு இடம் கிடைத்தது.

"என்ன ஆறுமுகம்......நீங்க எதுவரையிலும் போறீங்க?" என்றான் சோதிடன், திடீரென்று.

"மாயவரம் வரையிலும் போறேன்..." என்றேன் நான்.

"அட......அப்படிச் சொல்லுங்க...நானும் அது வரையிலும்தான் போறேன்...சபாஷ்!" என்று சொல்லிக் கொண்டே தன் கையை நீட்டினான். நான் என் கையை நீட்டினேன். மகிழ்ச்சியால் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

ரயில் ஊதியது; புறப்பட்டது.

"ஆமாம், ஆறுமுகம்! மாயவரத்தில் எங்கே போகிறீங்க?" என்றான் அவன் மறுபடியும்.

"கூறைநாடு வரையில் போகிறேன்!" என்றேன் நான்.

"அடடா, இது என்ன ஒற்றுமை! நான்கூட கூறைநாட்டுக்குத்தான் போகிறேன்!......" என்று சொல்லிக் கொண்டே மகிழ்ச்சி மிகுதியால் மறுபடியும் என் கையைப் பிடித்துக் குலுக்கினான் அவன்.

சற்று நேரம் சென்றது!

"அதிருக்கட்டும் ஆறுமுகம்! கூறைநாட்டிலே எந்தத் தெரு?"

"கீழவீதி..."—என்று நான் சொல்லி முடிப்பதற்குள், அவன் மறுபடியும் வலுக்கட்டாயமாக என் கையைப் பிடித்துக் குலுக்கி "நானும் கீழவீதிக்குத்தான் ...றேன்!" ...றான்.

எனக்கு ... போய் ... குலுக்கி ... எடுக்கச் ...

Best copy available

…பயணம்

ஆசிரியர் மு. க. எழுதி வந்த 'பயணம்' கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.

அறிவிப்பு

பல நண்பர்கள் நான் எழுதிய நூல்கள் வேண்டுமென்று கேட்டு எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவைகளை திருச்சி திராவிடப் பண்ணைக்குத் தந்து விட்டேன். ஆகையால் என் நூல்கள் வேண்டுவோர் திராவிடப் பண்ணை, திருச்சி-2 என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
சி. பி. சிற்றரசு.

கலைக் கழகத் துவக்க விழா

★

மாதம் ஒருமுறை கலை நிகழ்ச்சிகள் நடத்துவது, அந் நிகழ்ச்சிகளில், தங்கள் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்காதிருக்கும் நடிக நடிகையர் — பாடகர்களுக்கு வாய்ப்பளித்து அதன் மூலம் பட முதலாளிகளுக்கு புது முகங்கள் அறிமுகமாகவும் — நடிப்புத் துறையில் ஆர்வமுள்ளவர்க்கு நட்சத்திர நடிகராவதற்கு வேண்டிய வாய்ப்பு கிட்டவும் — ஆகிய பணிகளைச் செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு இக் கழகம் பணியாற்றும்.

ஜனவரியில் நடைபெற விருக்கும் இக் கலைக் கழகத் துவக்க விழாவில் அறிஞர் அண்ணா — தோழர் கருணாநிதி மற்றும் பட உலகப் பிரமுகர்கள் — நட்சத்திர நடிகர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ள ஏற்பாடு செய்து ஏறக்குறைய ஒரு கலை மாநாடு போன்று சிறப்பாக நடத்த வேண்டியதற்கான ஆக்க வேலைகளை கவனித்து வருவதாக தென்றல் "திரை" ஆசிரியர்களான கே. ஆர். பாலன், சுந்தரேசன் இருவரும் அறிவிக்கிறார்கள். துவக்க விழாத் தேதியும் — நிகழ்ச்சியும் பின்னர் அறிவிக்கப்படும்.

ooooooooooooooooooooooooo

அறிவிப்பு

எனக்குக் கடிதம் எழுதுவோர் தயவு செய்து கீழ்க் கண்ட முகவரிக்கே எழுதவும்:

பி. சி. கணேசன்,
காளிக்காட்டுத் தெரு,
திருவாரூர்

ooooooooooooooooooooooooo

விற்பனையாளர்கள் கவனிக்க...

- பொங்கல் மலர் முன் பணமின்றி அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
- தேவையான பிரதிகளின் எண்ணிக்கையையும், கழிவு நீங்கிய முன்பணத் தொகையையும் 30—12—57-க்குள் அனுப்பிவிட வேண்டும்.
- முன்பணமின்றி வரும் எந்தக் கடிதத்தையும் கவனிக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகிறோம்.

—நிர்வாகி,
பொங்கல் மலர்



வாழ்க மணமக்கள்!

ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் உரிமையாளர் ஏ. எல். சீனிவாசன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோரது சகோதரியின் புதல்வியும், நாச்சியாபுரம் சுப. சொ. சுப்பிரமணியம் (செட்டியார்) அவர்களின் …யுமான … இலக்குமிக்கும், நாச்சியாபுரம், … கண. …யார் அவர்களின் மகனும், இலண்டனில் …ா சர்வீஸ் இன்ஜினியராகப் பணிபுரிந்து வரு…ப்பனுக்கும் கடந்த 26—11—57-ம் தேதி …ாபுரத்தில் மிகச் சிறப்பாகத் திருமணம் …்கள், நண்பர்கள், படமுதலாளிகள் ஆகி…ாவிழாவினைச் சிறப்பித்து மணமக்களை

எல்லோரும் எழுதுகிறார்கள்!

★ எல்லா சிறப்பும் ஒருங்கே பெற்றிருக்கி…

★ பொங்கலன்று கரும்பைவிட-கற்கண்டைப் விட-தேன், திராட்சைகளைவிட தித்திக்க…

★ எந்த ஆண்டுப் பொங்கல் விழாவிலும் பெ… இன்பம் இந்த ஆண்டு பெறப் போகிறீர்க…

★ கண் கவரும் விதத்திலே—இன எழு… பாடும் சிறப்பிலே—திராவிடத்து ம… விடுதலை விருத்தத்திலே—முரசொலி மலர் முன்னணியில் நிற்கும்!

★ தலைவர் அண்ணா அவர்களின் அறிவு… துடன் ஆரம்பமாகும்.

★ பொங்கல் மலரின் ஒவ்வொரு ஏடும் திரு… தெவிட்டாத தெள்ளமுதாகத் திகழும்.

ஆசிரியர் **மு. க.** எழுது…
கவிதை நடைச் சொல்லோவி…
சிறுகதை
கட்டுரை
—மூன்று எழுத்தோவியங்களும் உண்டு

விலை 2 ரூபாய்

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் ப… செய்து கொள்ளுங்கள்!

சந்தாதாரர்கள் ரூ **2—75** அனுப்பி வைத்தால் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்ப…

புகைப் படங்கள்...

புகைப் படம் பிடிப்பதில் ஆர்வமுள்ள தோழர்கள் நல்ல காட்சிகளைப் பட…மாக்கி அனுப்புங்கள்; மலரில் வெளி…யிடுகிறோம்.